


Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 12 டிசம்பர் 2012

தனிப் பிரதி ரூ. 9/-

" நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும்,
வற்றாத நீரூற்றைப் போலவும்
இருப்பாய் " ( ஏசாயா 58 : 11 )

## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

* திருமறை ஆசான் இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு இதழ் நிறுத்தப்படும்.
* இந்தப் பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.
* திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## 2013 புத்தாண்டு வாழ்த்துக்கள்



“திருமறை ஆசான்” வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாகவும், இந்த ஊழியப் பணியில் அடியேனோடு இணைந்து பணியாற்றுகின்ற தேவ மனிதர்களுடைய குடும்பங்களின் சார்பாகவும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஆசிரியர்

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை .................... 1
2. ஏன் நல்லொழுக்க வாழ்க்கை மட்டும் இரட்சிக்கப்பட போதுமானதல்ல? .................... 9
3. பெண்கள் பகுதி .................... 12
4. வாலிபர் பகுதி .................... 15
5. சிறுவர் பகுதி .................... 18
6. நிழலும், நிஜமும் .................... 20
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை .................... 26
8. நீங்கள் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்கிறதில்லை? .................... 30


+ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
+ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
+ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
+ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசம் & தொலைபேசி எண்ணை கண்டிப்பாக எழுதவும்.
+ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

— ஆசிரியர்

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 DECEMBER 2012 Issue - 12

ஆசிரியர் உரை

# போதும் நிறுத்து

வருடத்தின் இறுதியில், விதவிதமான வாழ்த்துக்களை ஏந்தியும், வண்ண மயமான வாக்குத்தத்தங்களைத் தாங்கியும் ஏராளமான் மாத இதழ்கள் கிறித்தவ உலகில் வலம் வந்து கொண்டிருக்கும் இந்நாட்களில், ச்சே, இப்படியும் ஒரு தலைப்பா என்று திருமறை ஆசானைத் திருப்பிய மாத்திரத்தில் நீங்கள் முகம் சுளிப்பதை என்னால் பார்க்க முடிகிறது. என்ன ஆச்சு நம்ம ஆசானுக்கு என்று நீங்கள் புலம்புவதும் புரிகிறது. நீங்க ளெல்லாம் இப்படி நினைப்பது போல் பெரிதாக ஒன்றும் ஆகிவிடவில்லை. சமநிலையில் தான் எல்லாம் உள்ளது. ஆகவே, நீங்கள் நம்பிக்கையோடு தொடரலாம்.

“போதும் நிறுத்து” என்னும் இச்சொற்றொடர் கடுமையான பொருளைக் கொண்டது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. ஏனெனில், இச்சொற்றொடர் பேச்சின் ஊடே பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒன்று அல்ல. சொல்லப் போனால், இச்சொற்றொடரைத் தன் பேச்சில் ஒருவன் அடிக்கடி பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருப்பாரானால், அப்படிப்பட்டவர் நல்ல குணம் கொண்டவரல்ல என்று பரவலாகக் கருதப் படுவார். இதுதான் யதார்த்த நிலை.

இருப்பினும், “போதும் நிறுத்து” என்னும் இச்சொற்றொடர் மனிதர் களுக்கிடையேயான பேச்சில் காணப்படாத ஒன்று என்றும் சொல்லிவிட முடியாது. எப்படியெனில், ஒருவர் பிறரோடு மேற்கொள்ளும் பேச்சோ அல்லது உரையாடலோ சுமுகமாக அமையாமல், ஏதாவது ஒரு கட்டத்தில் முற்றி, வரம்பு மீறிப் போகும் போது அல்லது இரண்டு தரப்பில் ஒரு தரப்பு எதையும் புரிந்து கொள்ளாமல் பேச்சை அர்த்தமின்றி வளர்த்துக் கொண்டே போகும் போது, பொறுமையிழக்கும் அல்லது கோபங்கொள்ளும் எதிர் தரப்பாருடைய வாயிலிருந்து எகிறி வருவது தான் இச்சொற்றொடர். சில

வேளைகளில், இச்சுடு சொற்களுக்குப் பிறகு, காரசாரமாக அமைந்த பேச்சு ஒரு கட்டுக்குள் வருவதும் உண்டு அல்லது கை மீறிப் போய் ஏடா கூடமாக முடிவதும் உண்டு.

*இப்படித் தடித்த வார்த்தைகளைக் கொண்ட இச்சொற்றொடரை ஒரு மனிதன் இன்னொரு மனிதன் நிமித்தமோ அல்லது ஒரு தரப்பு, எதிர்தரப்பின் நிமித்தமோ ஏதாவது ஒரு சூழ்நிலையில் பயன்படுத்துவதை நம்மால் ஏற்று ஓரளவு சீரணிக்க முடிகிறது. எப்படியெனில், இது மனித பெலவீனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.* இது வரைக்கும் சரிதான். ஆனால், பரலோகத்தின் தேவன், சில சந்தர்ப்பங்களில் கிட்டத்தட்ட இதே பாணியில், தன்னிடத்தில் பேசியவர்களிடம், அதாவது தன்னை நோக்கி ஜெபித்தவர்களிடம் நடந்து கொண்டிருக்கிறார் என்பதை அறியும் போது ஆச்சரியமாக உள்ளது! ஆம், இக்கருத்தை ஏற்றுக்கொள்ள நம் மனம் மறுக்கிறது. பரலோகத்தின் தேவனுமா இப்படி என்று கூட எண்ணத் தூண்டுகிறது. ஆனால், என்ன செய்வது? வேதாகமம் ஓர் உண்மையை இப்படியாக வெளிப்படுத்தும்போது நாம் அதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். ஒருவேளை மனிதர்களைப் போன்று, "போதும் நிறுத்து" என்ற வார்த்தைகளை அவர் நேரிடையாகப் பயன்படுத்தவில்லையென்பது உண்மையாக இருந்தாலும், இவ்வார்த்தைகளுக்கு இணையான பொருளில் தேவனிடத்திலிருந்து காரியங்கள் வராமலில்லையென்பதும் உண்மையாகவே உள்ளது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகையால், சகல நீதிக்கும் சொந்தக்காரராகிய நம் தேவன், " போதும் நிறுத்து " என்ற பாணியில் எங்கெல்லாம் பேசியிருக்கிறார் என்பதைத் திறந்த மனதோடு கவனித்து, வருடத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் நமக்கு அதிலிருந்து என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

இப்படித் தடித்த வார்த்தைகளைக் கொண்ட இச்சொற்றொடரை ஒரு மனிதன் இன்னொரு மனிதன் நிமித்தமோ அல்லது ஒரு தரப்பு, எதிர்தரப்பின் நிமித்தமோ ஏதாவது ஒரு சூழ்நிலையில் பயன்படுத்துவதை நம்மால் ஏற்று ஓரளவு சீரணிக்க முடிகிறது. எப்படியெனில், இது மனித பெலவீனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## I செயலுக்கு மாற்றாக ஜெபத்தைக் கொண்டு வரும்போது...

"போதும் நிறுத்து" என்னும் இத்தலைப்பிலிருந்த நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நாம் தேவனுக்காகவும், தேவன் நிமித்தமும் செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல் வெறுமனே ஜெபிப்பதை தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்பது.

இது என்ன வம்பாக இருக்கிறது, தேவனை நோக்கி ஜெபிப்பது கூடத் தவறா என்று நீங்கள் கேட்கிறீர்கள். நியாயம் தான். உங்கள் கேள்வியில் குறையேதுமில்லை. பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிப்பதில் எவ்விதத்

என் தாசனாகிய மோசேயே, நீ செயலில் இறங்கு, என் ஜனமாகிய இஸ்ரவேலே நீ கடலில் இறங்கு. அதை விட்டுவிட்டு என்னை ஏன் பார்க்கிறீர்கள் என்று கேட்கிறார். இந்த வசனத்தின் வார்த்தைகள் அதைத்தானே நமக்குச் சொல்கிறது.

தவறுமில்லை. அப்போஸ்தலன் பவுலடியார், "ஜெபத்திலே உறுதியாய்த் தரித் திருங்கள்" (ரோமர் 12:12) என்று ரோமாபுரியாருக்கும், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச. 5:17) என்று தெசலோனியருக்கும் ஆவியான வரின் ஏவுதலாலே எழுதிக் கொடுத்துள்ளார். ஆகவே, ஜெபிப்பது நல்லது தான், அது அவசியமானதும் கூட. ஆனாலும், ஜெபிப்பதை நிறுத்திவிட்டு, "செயலில் இறங்கு" என்று தேவன் பேசியிருக்கிறார் என்பதையும் நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது.

இஸ்ரவேலர்கள் எகிப்திலே சற்றேறக்குறைய 400 ஆண்டுகள் அடிமைகளாக இருந்த நிலையில், அவர்கள் கூக்குரலைக் கேட்ட தேவன், பார்வோனுடைய கோரப்பிடியிலிருந்து தமது ஓங்கிய புயத்தினாலும், பலத்த கரத்தினாலும் விடுவித்தார். அவர்கள் புறப்பட்ட பின் மறுபடியும் தன் இருதயத் தைக் கடினப்படுத்தின பார்வோன், இஸ்ரவேல் புத்திரரைப் பின் தொடர்ந் தான். அங்கே, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள் (யாத். 14:8,10) அத்தோடு நிறுத்தாமல் இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோத மாக முறுமுறுக்கவும் தொடங்கினார்கள் (யாத். 13:12). அங்கே, மோசே ஜனங் களை நோக்கி; பயப்படாதிருங்கள் "... கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்" என்றான் (யாத். 13:13). இந்த இடத்தில் மோசே கர்த்தரை நோக்கி ஜெபித்திருக்கிறார் என்று அடுத்த வசனத்தை வைத்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; *நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன?* புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திர ருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்து விடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத் தின் நடுவாக வெட்டாந் தரையிலே நடந்து போவார்கள்" என்றார் (யாத். 13:15,16).

இங்கே கவனியுங்கள், "ஆபத்துகாலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய் " (சங். 50:15 ) என்று சொல்லும் அதே தேவன், " நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? என்று கேட்டதோடு, "புறப்பட்டுப் போங்கள்" என்கிறார் (வ.15) ஏனெனில், இஸ்ரவேல் ஜனங்களும், மோசேயும் தேவன் எகிப்தியருக்குச் செய்த யாவற்றையும், இவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த விதத்தையும் அறிந் திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேவனுக்கு, துரத்தி வருகின்ற பார்வோனின் சேனைகளையும், எதிரே இருக்கும் செங்கடலையும் மேற்கொள்ளுவது முடியாத ஒன்று அல்ல என்பது தெரிந்திருக்க வேண்டும். அப்படியானால், உங்களுக்கு ஏன் அந்த விசுவாசம் இல்லை? என்னுடைய வல்லமையை இன்னுமா சந்தேகிக்கிறீர்கள்? என்னை நோக்கிப் பார்ப்பதற்கும், கூப்பிடு வதற்கும் இதுவா நேரம், உடனடியாகச் " செயலில் இறங்குங்கள்". அதாவது,

“ புறப்பட்டுப் போங்கள் ” என்றார். *என் தாசனாகிய மோசேயே, நீ செயலில் இறங்கு, என் ஜனமாகிய இஸ்ரவேலே நீ கடலில் இறங்கு, அதை விட்டுவிட்டு என்னை ஏன் பார்க்கிறீர்கள் என்று கேட்கிறார். இந்த வசனத்தின் வார்த்தைகள் அதைத்தானே நமக்குச் சொல்கிறது.*

அப்படியானால், அருமையானவர்களே தேவனுக்காகச் செயல்படுகிற காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? இன்றைக்குக் கிறிஸ்துவின் காரியமாக, கிறிஸ்துவின் சபையின் காரியமாக, கிறிஸ்துவின் உபதேச காரியமாக களத்தில் இறங்கி தைரியமாகக் காரியமாற்றுவதற்கும், செயல்படுவதற்கும் ஆட்கள் தேவை. ஆனால், அன்றைக்குக் கர்த்தராலே வீழ்த்தப்பட்ட பார்வோனின் சேனையைக் கண்டு இஸ்ரவேலர்கள் பயப்பட்டது போல, குடும்பத்திலிருந்தும், சமுதாயத்திலிருந்தும் எழும்புகின்ற சத்தும், வலுவுமற்ற எதிர்ப்புகளைக் கண்டு பயந்து, தேவனுடைய வல்லமையை மறந்து, விசுவாசம் ஏதுமில்லாமல் முறுமுறுத்துக் கொண்டும், முறையிட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். தனி ஒரு ஆளாகவோ அல்லது ஒரு குழுவாகவோ அல்லது ஒரு கூட்டமாகவோ நாம் விசுவாசத்தோடு நின்று தேவனுக்காகச் செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல் முறையிடுவதையோ, ஜெபம் பண்ணுவதையோ தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக, கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்தோடு செயலில் இறங்கிக் காரியமாற்ற வேண்டும். அதைத்தான் தேவன், அவருடைய வல்லமையைக் கண்டவர்களிடம், அவர் திட்டத்தின்படியான இரட்சிப்பைப் பெற்றவர்களிடம், அவர் தரும் ஆசீர்வாதங்களை அனுபவிப்பவர்களிடம் எதிர்பார்க்கிறார்.

இந்த உண்மையை நினைவுபடுத்தித்தான் மொர்தெகாய் என்னும் தேவ மனிதன் தன் வளர்ப்பு மகளாகிய எஸ்தர் மகாராணியை எச்சரித்தான் *நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்; அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான்.* (எஸ்தர். 4:14) ஆம், செயல்பட வேண்டிய தருணத்தில் செயல்பட வேண்டியது அவசியம். பார்வோனின் சேனை நம்மை பயமுறுத்தினாலும், அலைமோதும் செங்கடல் நம்மை அச்சுறுத்தினாலும் கலங்காமல், விசுவாசத்தோடு செய்ய வேண்டியதைச் செய்வோம். மீதியைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

நம் தேவன், ஜெபத்திலே பிரியப்படுகிறவராகவும், ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவராகவும் இருக்கிறார். இவ்வுண்மையில் எனக்கு ஊசியின் முனையளவும் மாறுபாடு இல்லை. ஆனால், அதே தேவன், நாம் அவருக்காகவும், அவர் நிமித்தமாகவும் செய்ய வேண்டியவை களைச் செய்யாமல் ஜெபிப்பதைத்தான் ஏற்றுக்கொள்வதில்லை.

## II மனமாற்றத்திற்கு மாற்றாக ஜெபத்தைக் கொண்டு வரும்போது...

“போதும் நிறுத்து” என்னும் இத்தலைப்பிலிருந்த நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், நாம் செய்த பாவத்திற்காக மனந்திரும்பாமல் வெறுமனே ஜெபிப்பதை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை என்பது.

பரலோகத்தின் தேவன் ஜெபத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்று நான் இங்கே எழுதும் போது, அதன் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் தயவு செய்து என்னைத் தவறாக எண்ணி விடாதீர்கள். *நம் தேவன், ஜெபத்திலே பிரியப்படுகிறவராகவும், ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவராகவும் இருக்கிறார். இவ்வுண்மையில் எனக்கு ஊசியின் முனையளவும் மாறுபாடு இல்லை.* ஆனால், அதே தேவன், நாம் அவருக்காகவும், அவர் நிமித்தமாகவும் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் ஜெபிப்பதைத்தான் ஏற்றுக் கொள்வதில்லை என்று சொல்ல வருகிறேன்.

கர்த்தருடைய தாசனாகிய மோசேயின் மரணத்திற்குப் பிறகு, திரளாய் இருந்த இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திச் சென்ற யோசுவா, எப்படி முடியுமோ என்று நினைத்த அரணான பட்டணமாகிய எரிகோவை ஆர்ப்பரிப்பினாலே வெற்றி கண்டார். (யோசுவா 6:20,21) ஆனால், சுலபமாக முறியடித்து விடலாம், கொஞ்சம் பேர் தான் என்று வேவுகாரர்களால் கணிக்கப்பட்ட (யோசுவா 7:2,3) ஆயி பட்டணத்தில், அவர்களுக்கு முன்பாக முறிந்தோடிய தோடு, ஓட ஓட விரட்டி வெட்டப்பட்டார்கள் (7:4,5) அப்பொழுது இஸ்ரவேலர்களின் இருதயம் கரைந்து போயிற்று. அங்கே, யோசுவாவும், இஸ்ரவேலின் மூப்பர்களும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தலையிலே புழுதியைப் போட்டுக்கொண்டு விழுந்து கிடந்தார்கள். யோசுவா தேவனை நோக்கி இவ்விதமாக விண்ணப்பம் செய்தான். ஆ, ஆண்டவரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; இப்பொழுது நான் என்ன சொல்லுவேன். கானானியரும், தேசத்துக் குடிகள் யாவரும் இதைக் கேட்டு, எங்களை வளைந்து கொண்டு, எங்கள் பேரைப் பூமியிலிராதபடிக்கு வேரற்றுப் போகப் பண்ணுவார்களே; அப்பொழுது உமது மகத்தான நாமத்துக்கு என்ன செய்வீர் என்று மன்றாடினான் (யோசுவா 7:8,9).

தயவு செய்து இந்த ஜெபத்தைக் கவனியுங்கள். அங்கே யோசுவா மிகுந்த வேதனையோடும், துயரத்தோடும், துக்கத்தோடும், கர்த்தர் கண்டிப்பாக இரங்கி நன்மை செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையோடும் ஜெபித்துள்ளார். யோசுவா ஒன்றும் சாதாரணமானவர் அல்ல. மிகப்பெரிய தேவ மனிதர். ஆனால், யோசுவாவின் உருக்கமான ஜெபத்திற்குத் தேவனின் பதில் என்ன? “ *அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி : நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன?*” (யோசுவா 7:10) என்றார். யோசுவா மிகுந்த வினயத்தோடு ஜெபித்துள்ளார். ஆனால், கர்த்தரோ, நீ விழுந்து கிடக்கிறது என்ன? என்று கேட்கிறார். இதைக் கூர்ந்து கவனிக்கும் போது, நமக்கே ஒரு மாதிரி இருக்கிறது. ஆயினும், தேவன் அங்கே கடுமை யாக நடந்து கொண்டார். அப்படிக் கடுமையாக நடந்து கொண்ட தேவன், அதற்கான காரணத்தையும் அடுத்த வசனத்தில் தந்திருக்கிறார். இஸ்ரவேலர் பாவம் செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக் கொண்டதும், களவு செய்ததும், வஞ்சித்தும், தங்கள் பண்டம் பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே (யோசுவா 7:11) என்று மேலும், 13-ம் வசனத்தில், பாவத்தை உங்களை விட்டு விலக்கு என்று கட்டளையிட்டார்.

ஆக, தேவன் தன் தாசனாகிய யோசுவாவிடம் கூறுவதிலிருந்து நமக்கு தெரிவது என்ன? பாவத்தை விலக்காமல் ஏறெடுக்கப்படும் ஜெபத் திற்கு, ஒருவேளை அது எவ்வளவு உருக்கமானதாக இருந்தாலும், அந்த ஜெபத்தை எவ்வளவு பெரிய மனிதன் ஏறெடுத்தாலும் தேவன் அதை ஏற்றுக் கொள்வதில்லை. ஜெபத்தை நிறுத்தி விட்டு, செய்ய வேண்டியதைச் செய் என்கிறார். இந்த இடத்தில், " பாவம் உங்கள் நடுவிலிருக்கிறது அதை விலக்கு, முதலில் மனந்திரும்ப வேண்டியவன் மனந்திரும்பட்டும், பிறகு என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணலாம் " என்கிறார் அப்படித்தானே.

என்ன பாவம் அவர்களுக்குள்ளாக இருந்தது? சப்தியின் மகன் கர்மீக்குப் பிறந்த ஆகான் என்பவன், சாபத்தீடானதில் சிலதை எடுத்துக் கொண்டான்; ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது (யோசுவா 7:1). இந்த ஆகான் அடையாளம் காணப்பட்டு, கல் லெறிந்து கொல்லப்பட்டதற்குப் பிறகு, கர்த்தர் தமது கோபத்தை விட்டு மாறினார் (7:25). அதன் பிறகு கர்த்தர் யோசுவாவை நோக்கி; நீ பயப்படாம லும், கலங்காமலும் இரு, நீ யுத்த ஜனங்கள் யாவரையும் கூட்டிக் கொண்டு எழுந்து ஆயி பட்டணத்தின் மேல் போ, இதோ ஆயியின் ராஜாவையும், அவன் ஜனத்தையும் அவன் பட்டணத்தையும், அவன் நாட்டையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன் (8:1) என்றார். இப்பொழுதாவது புரிகிறதா? "போதும் நிறுத்து" என்று நம் தேவன் சொல்லுகிறவர் தான் என்று.

அப்படியானால், அருமையானவர்களே, நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்து கொண்டு தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டுள்ளோம்? நம்முடைய ஜெபங்கள் தேவ சமூகத்தில் அருவருக்கப்படத்தக்கவைகளாக வும் (நீதி. 28:9), "போதும் நிறுத்து" என்று சொல்லப்படத்தக்கவைகளாகவும் உள்ளதா? அல்லது ....நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளியிடப்பட்டது... (தானி. 9:23) என்று பதிலளிக்கப்படத்தக்கவைகளாக உள்ளதா? நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். வருடத்தின் இறுதியில் நின்று கொண்டுள்ளோம். நம்மை நாம் உய்த்துப் பார்ப்பதற்கு இது சரியான தருணம். தேவனுக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் எதிரான செயல்கள், மனந்திரும் பாத பாவங்கள் நம்மிடம் இருக்குமானால் அவைகள் எல்லாவற்றையும் களைந்து போட்டு, புதிய ஆண்டிலிருந்து புதிய வாழ்க்கைக்கு நம்மை ஆயத்த மாக்குவோம்.

## III நற்செய்திக்குக் கீழ்ப்படிவதற்கு மாற்றாக ஜெபத்தைக் கொண்டு வரும்போது...

"போதும் நிறுத்து" என்னும் இத்தலைப்பிலிருந்த நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஒருவன் கீழ்ப்படியாமல், வெறுமனே ஜெபிப்பதை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை என்பது.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து இயேசுவுக்கு அடுத்தபடியாகப் பிரபலமாயி ருப்பவர் அப்போஸ்தலன் பவுல். சவுல் என்னும் பெயருடன் யூத மதத்தில் மிகவும் பக்தி வைராக்கியமாயிருந்து, கிறிஸ்துவின் சீடர்களுக்குச் சிம்ம

சொப்பனமாக விளங்கிய இவனை, எருசலேமிலிருந்து தமஸ்கு பட்டணம் செல்லும் வழியில் இயேசு ஆண்டவர் சந்தித்தார். அந்நாளில் அவன், சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் (அப். 9:). அதைத் தொடர்ந்து நடந்த உரையாடலும், அவன் மனமாற்றம் அடைந்த சம்பவமும் இந்த அதிகாரத்தின் கீழ்வரும் வசனங்களிலும் (9:8-18). அப்போஸ்தலர் 22ம் அதிகாரத்திலும், பரிசுத்த ஆவியானவராலே நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அவன் இயேசுவாலே சந்திக்கப்பட்டபோது, *நடுங்கித் திகைத்து; ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்; நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்* என்றார் (அப். 9:6). அங்கே மூன்று நாள் பார்வையில்லாமல் புசியாமலும், குடியாமலுமிருந்த சவுலைப் போய்ச் சந்திருக்கும்படி, தமஸ்கு பட்டணத்தில் இருந்த அனனியா என்னும் சீஷனை தேவன் பணித்தார். அப்பொழுது கர்த்தர்; நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள மனுஷனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்; அனனியா என்னும் பேருள்ள ஒரு மனிதன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கை வைக்கவும் தரிசனம் கண்டான் என்றார் (அப். 9:12). இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள அனனியாவுக்குத் தயக்கம் மலையளவு இருந்தாலும், " நீ போ " என்ற தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சவுலைச் சந்தித்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, பாவங்கள் போகக் கழுவப்பட்டான் (அப். 22:16).

சபைச் சரித்திர நூலாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் இடம் பெற்றுள்ள மனமாற்றச் சம்பவங்களில் இது மிகவும் பிரபலமானது. கர்த்தரின் கட்டளையை ஏற்று அனனியா சீடன் நேர்த்தெருவுக்குச் சென்ற போது, சவுல் கடுமையான உபவாசமிருந்து (அப். 9:9) ஜெபித்துக் கொண்டிருந்தான் (அப். 9:11). இன்றைக்கு " வால்போஸ்ட் " அடித்து விளம்பரப்படுத்தி நடத்தப்படுகின்ற காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரைக்குமான உபவாச ஜெபம் அல்ல அது. இன்னும், பெரிய ஊழியக்காரர்கள் என்று தங்களாலும், மக்களாலும் கருதப்படுபவர்களின் உபவாசம் போன்று பழச்சாறுகளையும், சத்து நிறைந்த நீர் ஆகாரங்களையும் கொண்டது அல்ல அந்த உபவாசம். மூன்று நாள் புசியாமலும், குடியாமலும் இருந்தான் என்று வேத வசனம் சொல்லுகிறது. இப்படிப்பட்ட நூறு சதவீகிதம் உண்மையான உபவாச ஜெபமானது சவுலின் பாவங்களைப் போக்குவதற்குப் போதுமானதாயிருக்கவில்லை. தன்னுடைய பாவங்களிலிருந்து கழுவப்படுவதற்கு, சுவிசேஷத்தின் உபதேசத்துக்குச் சவுல் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது. என்னதான் ஜெபம் செய்தாலும், எப்படிப்பட்ட உபவாசமிருந்து ஜெபம் செய்தாலும், நற்செய்தியின் உபதேசத்துக்குக் கீழ்ப்படியாமல் இரட்சிப்படைய முடியாது என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. யாராவது


நான் ஜெபத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்வாரானால், அவர் கிறிஸ்துவின் நற்செய்தியின் உபதேசத்தை அவமானப்படுத்துகிறார் என்று அடித்துச் சொல்லிவிடலாம்.

*நற்செய்திக்குக் கீழ்ப்படியாமல் ஜெபத்தின் மூலம் இரட்சிப்பு என்றால், கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் அப்போஸ் தலன் பேதுருவுக்கு வேலையே இல்லையே* (அப். 10ம் அதிகாரம்). தேவ சந்நிதியைச் சென்றடைந்த ஜெபங்களை கொர்நெலியு செய்தபோது (10:4). அவன் அப்பொழுதே இரட்சிப்படைந்திருக்க முடியுமே. கொர்நெலியுவின் வீட்டிற்கு பேதுரு போகும்படியான ஓர் ஏற்பாட்டையும், கொர்நெலியுவுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும்படியான ஓர் ஏற்பாட்டையும் தேவன் செய்திருக்க வேண்டிய அவசியமேயில்லையே. தன்னுடைய சந்நிதியை வந்தெட்டின ஜெபத்தை அவன் செய்த போதே, நீயும், உன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்று தேவன் வெளிப்படுத்தியிருக்கலாமே. ஆகவே, தான் ஜெபிக்கும் ஜெபத்தின் மூலம் நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று யாராவது தேவனிடத்தில் கேட்டால், அவருடைய பதில், "போதும் நிறுத்து" என்பதாகவே இருக்கும். இயேசுவால் சந்திக்கப்பட்ட சவுலின் ஜெபத்தைக் காட்டிலும், கொர்நெலியுவைக் காட்டிலும் சிறந்த ஒரு ஜெபத்தை நாம் செய்து விடப் போகிறோமா? தேவனிடத்தில் பட்சபாதமில்லை (அப். 10:35) சவுலையும், கொர்நெலியுவையும் ஜெபத்தினாலே இரட்சிக்காத தேவன் நம்மை மாத்திரம் ஜெபத்தின் மூலம் இரட்சித்து விடுவார் என்று எண்ணுகிறீர்களா?

பிரியமானவர்களே, நற்செய்திக்குக் கீழ்ப்படிவதற்கு மாற்றாக ஜெபம் ஒருபோதும் இருக்க முடியாது. இன்னும், ஒளி, ஒலி, தரிசனம் என்று எதுவும் ஒருவனை இரட்சிக்காது. இரட்சிப்புக்கு சுவிசேஷம் தான் தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). ஆகையால், நாம் சுவிசேஷத்தின்படியான இரட்சிப்பைப் பெறாமல் நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்போமானால், நாம் ஒரு தீர்மானத்துக்கு வருவது நல்லது. சுவிசேஷத்தின் உபதேசத்துக்கு நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். இரட்சிப்புக்கு அது ஒன்றுதான் வழி. ஜெபம் கண்டிப்பாக நற்செய்திக்குக் கீழ்ப்படிவதற்கு மாற்று ஆகாது.

ஆகையால், கிறிஸ்துவின் உபதேசப்படி நாம் விசுவாசித்து (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:38), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10). பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வோம் (அப். 22:16). இப்படிச் செய்வோமானால், கர்த்தராலே அவருடைய சபையில் சேர்க்கப்படுவோம் (அப். 2:47). இதன் மூலம் புதிய ஆண்டில் தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தோடு (ரோமர் 8:15) பிரவேசித்து, சகல விதமான ஆவிக்குரிய மற்றும் சரீர ஆசீர்வாதங்களோடு நிறைவான வாழ்க்கையை எதிர் வரும் புதிய ஆண்டில் நடத்துவோம்.

வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாகப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



# ஏன் நல்லொழுக்க வாழ்க்கை மட்டும் இரட்சிக்கப்பட போதுமானதல்ல?

## J.C. சோட்

**நீ**ங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ, அநேகமாக பெரும்பாலான ஜனங்கள் தங்கள் நற்கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முயற்சி செய்வதால் அவர்கள் இழந்து போவார்கள். இப்படிப்பட்ட சிந்தனை நித்திய ஜீவனை நாடி இயேசுவினிடத்தில் வந்த அந்த பணக்கார வாலிபனை நமக்கு நினைவுப்படுத்துகிறது. நாம் இப்படியாக வாசிக்கி றோம் *"அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி : நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் : நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே ; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி : எவைகளை என்று கேட்டார். அதற்கு இயேசு : கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு : நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது, பரலோகத்தில், உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான் "* (மத். 19:16-22).

நாம் இப்பொழுது வாசித்த இந்த சம்பவம் பழைய ஏற்பாடு நடைமுறையில் இருந்த காலத்தில் நடந்த ஒன்று. வேறுவிதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அப்பொழுது அவர்களைக் கட்டுப்படுத்தியது. எனவே, இயேசு நியாயப்பிரமாணம் என்ன சொன்னதோ அதன்படி இந்த வாலிபனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டுமானால், கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னது மோசேயின் பத்து கட்டளைகளைக் குறிக்கும். அந்த வாலிபன் அந்தக் கற்பனைகளை எல்லாம் தன் சிறுவயது முதல் கைக்கொண்டு வருவதாக இயேசுவுக்குப் பதிலளித்தான். இது குறித்து நாம் எண்ணிப் பார்க்கும் போது இந்தக் கற்பனைகளையெல்லாம் அவன் கைக்கொண்டிருப்பதனால் நிச்சயமாகவே அவன் ஒரு நல்லொழுக்கமுள்ளவனாகத்தான் இருந்திருக்கிறான். வேறுவிதமாகச் சொன்னால், எப்படிப் பார்த்தாலும் அவன் துன்மார்க்கனோ அல்லது பொல்லாதவனோ அல்ல. இங்கே அவன் பரலோகம் போவதற்குத்தான்

தகுதியானவன் என்று நினைத்துக் கொண்டு, வெறுமனே அதற்கான அங்கீகாரத்தைக் கர்த்தரிடம் பெறுவதற்காக வந்தது போலவே நமக்குத் தோன்றுகிறது. இந்தக் காரியத்தில் இவனுடைய நற்குணங்கள் மட்டும் போதுமானதாக இல்லை. இயேசுவால், அவனுடைய இருதயத்திற்குள்ளும், ஜீவியத்திற்குள்ளும் உற்றுப் பார்த்து, அங்கே ஒரு தடையிருந்ததைக் காண முடிந்தது. இவன் ஒரு செல்வச் செழிப்புள்ள வாலிபனாக இருந்தபடியால் தன் நம்பிக்கையை ஐசுவரியத்தின் மேல் வைத்திருந்தான். எனவே தான் இயேசு அவனிடம் அவனுக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு தன்னைப் பின்பற்றும்படி சொன்னார். அதன் பின்பு, நமக்கு ஒரு சோகமான வாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான் என்று. நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை மாத்திரம் ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

ஒருவர் இரட்சிக்கப்பட நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்பது உண்மை தான். இதன் பொருள், ஒருவர் கெட்ட மற்றும் தவறான காரியங்களைச் செய்யாதபடி தன்னை விலக்கி காத்துக் கொள்வது தான். மேலும், நல்லொழுக்கமுள்ள ஒருவர் மாம்சத்தின் கிரியைகளையும், இந்த உலகத்தின் காரியங்களையும் செய்ய முடியாது என்றும் பொருள்படும். பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். "*அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும்; விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை*". (I கொரி. 6:9,10). உலகத்தாரோடு கொரிந்து பட்டணத்து சபையார் கொண்டிருந்த ஐக்கியம் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார். "*விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவர் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூட புசிக்கவுங் கூடாது*" (I கொரி. 5:9-11). இங்கே பவுல் உலகத்தாரோடு இடைபடாமல் இந்த வாழ்க்கையைக் கழிப்பது முடியாத காரியம் என்று சொல்கிறார்; ஆனால், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரன் என்று வரும் போது, அவன் உண்மையற்ற, தேவ பக்தியில்லாத வாழ்க்கையை நடத்தினால் அப்படிப்பட்டவனோடு நாம் எந்த ஐக்கியத்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்கிறார்.

சில மக்கள், கிறிஸ்தவர்களுக்கு மற்ற மதங்களில் இருப்பவர்களைக் காட்டிலும் ஒழுக்க ரீதியான சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். எனவே, அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகை பிடிக்கலாம், மதுபானம் குடிக்கலாம், ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடலாம், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தலாம், அசிங்கமாக உடை உடுக்கலாம் என்றெல்லாம் நினைக்கிறார்கள். நிச்சயமாகவே, வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதையும், ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பது என்றால் என்ன என்பதையும்

அறிந்தவர்கள், இது அப்படியல்ல என்பதை அறிவார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள், இத்தகைய ஒழுக்கக் கேடான காரியங்களில் ஈடுபடுவது உண்மை தான், இப்படிச் செய்பவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருப்பதில்லை. அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் இழந்து போவார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவனாவதற்கு அவன் தேவனிடத்திலும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதிலும் மாத்திரம் விசுவாசம் வைத்தால் போதாது. மாறாக, அவன் தன் எல்லாப் பாவங்களிலிருந்தும் மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு இறுதியாக தன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் ஒருவர் செய்தால் மாத்திரமே கர்த்தர் அந்த நபரை இரட்சிக்கவும், தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்ளவும் விரும்புகிறார். ஒரு கிறிஸ்தவர் ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டு மென்றால் அவர் மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். இதை நாம் வேத வசனங்களில் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம் (மாற்கு 16:15, 16; அப். 2:38; மத். 10:32; அப். 2:47 ; வெளி. 2:10).

என் நண்பரே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படி இரட்சிக்கப்பட்டிருந்தால், எப்படி நீங்கள் இரட்சிக்கப் பட்டீர்கள்? நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலமாக பரலோகம் செல்ல முயற்சி செய்பவர்களில் ஒருவராக இருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் நம்பிக்கையை உங்கள் மீதோ, உலக சம்பத்தின் மீதோ, சில மனிதன் மீதோ, மனிதரால் உண்டாக்கப்பட்ட சில முறைமைகள் மீதோ அல்லது இந்த உலகத்திலுள்ள ஏதாவது ஒன்றின் மீதோ வைத்திருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்கள் சொந்த முயற்சியினால் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறீர்கள் என்று பொருள். இது உண்மையானால் நீங்கள் அப்படிச் செய்ய முடியாது என உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்து அல்லாமல் வேறொருவராலும் நம்மை இரட்சிக்க முடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரண பரியந்தம் தூய்மையான தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தால், அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரம் வாக்குத்தத்தம் பண்ணாமல், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டைத் தருவதாகவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். இவைகளைச் சொல்வது தான் வேதாகமும், கிறிஸ்தவமும்.

வெகுகாலத்திற்கு முன்பு தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது அன்றும் உண்மையாக இருந்தது, இன்றும் உண்மையாக இருக்கிறது. அவர் சொன்னார், கர்த்தாவே, "*மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்* " என்று (எரேமியா 10:23). இதை ஒத்துக்கொள்வதற்கு தாழ்மை தேவை. ஆனால், ஒருவர் இப்படியாகச் செய்யும் போது ஞானமுள்ளவராகிறார்.

மறுபடியும், நீங்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும், நல்லவனாக இருந்தாலும், கெட்டவனாக இருந்தாலும், நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவனுக்குக் கீழ்ப்படிய நான் உங்களை வலியுறுத்த விரும்புகிறேன். அப்போது தான் நீங்கள் இரட்சிக்கப்பட முடியும் (மாற்கு 16:16) அப்போது தான் கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார் (அப். 2:47).

# என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்

RACHEAL NAYAGAM

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்களை கூறி எழுதுவது. கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் இவ்வருடத்தின் இறுதி மாதத்திலும் அவருடைய வார்த்தைகளை தியானிப்பதற்கு அவர் கொடுத்த சிலாக்கியத்திற்கு நன்றி சொல்லி நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

நம் இருதயம் ஏக்கத்துடன் விரும்பும் பல காரியங்களில் ஒன்று சமாதானம். கலங்கினப் போன இருதயத்துடன் இருக்கும் சீஷர்களிடம் இயேசு இவ்வாறு கூறுகிறார். சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 14:27). தன்னை பின்பற்றும் அனைவரும் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன் என்று சொன்னது மட்டும் போதுமா? இல்லை. முந்தியே அவர் தன்னுடைய பங்கை செய்து முடிந்து விட்டார். தன் வார்த்தையினாலும், செய்கையினாலும் சமாதானமான இருதயத்திற்கான மாதிரியை உருவாக்கி விட்டார். இதன் ஒட்டுமொத்த கருத்தையும் ஒரே வரியில், ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமும் என்று ரோமர் 8:6ல் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார். ஜீவன், சமாதானம்!! ஆனால் இதை அடைந்து கொள்வதென்பது நிபந்தனைக்குட்பட்டது. அப்படியானால் ஆவியின் சிந்தை எதை உள்ளடக்கியதாய் இருக்கிறது? வேதத்தின் துணையோடு பார்ப்போம்.

ஆவிக்குரிய மனுஷனாக ஒருவன் தன்னை வைத்துக் கொள்வதற்கு அவனுக்கு வாஞ்சை இருக்க வேண்டும். ஆவியின் சிந்தை ஜீவனும், சமாதானமும். அநேகருக்கு அந்த வாஞ்சை இல்லை. முதலாவது, அவன் கிறிஸ்தவான மாறி தேவனுடைய வழியில் நடக்க தன்னை நிர்ணயம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

அருமையானவர்களே! ஆவியின் சிந்தையும், சமாதானமும் மனதில் (அல்லது) சிந்தையில் ஆரம்பிக்க வேண்டும். மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் (ரோமர் 12:2). இந்த வசனம் மேல் வசனத்தோடு ஒத்துப்போகிறது. எப்படியெனில், மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமும் (ரோமர் 8:6). பொதுவாகவே எதை செய்யக்கூடாது என்று கேட்கிறோமோ அதையே செய்யும்படி மனம் சொல்லுகிறது. உதாரணமாக, அசிங்கமான ஒரு விளம்பரம் நம் மனதைப் பாதிக்கும் போது அந்த எண்ணத்தை மனதில் இருந்து வெளியே கொண்டு வரவேண்டும். உடனே, நம் மனதை வேறு நல்ல நினைவுகள், வேத வசனங்கள் என்று நினைக்கச் செய்ய வேண்டும். அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான். (நீதி. 23:7) ஆக, சமாதானம் என்பது வெளியில் அல்ல, நமக்குள் உண்டாக வேண்டும்.

நாம் எதைப் பார்க்கிறோமோ, எதைக் கேட்கிறோமோ அவைகள் நம் சிந்தையைக் கட்டுப்படுத்துகிறது. நம் வீடுகளில் நாமும் நம் பிள்ளைகளும் படிக்கும் புத்தகங்கள், மாத இதழ்கள், பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இவற்றைப் பற்றி யோசியுங்கள்? அவைகள் மாம்ச சிந்தையைத் தூண்டுகிறதா? அல்லது ஆவியின் சிந்தயையா? ஆவியின் சிந்தை ஜீவனும், சமாதானமும் என்று தேவன் சொன்னதை நினைவு கூறுங்கள். நம் மனதை ஆவிக்குரிய சிந்தனைகளில் நிரப்பினாலேயொழிய ஒரு போதும் நாம் ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளவே முடியாது.

சரி, நாம் ஆவியின் சிந்தனையோடுதான் வாழ்ந்து கொண்டுள்ளோமா? என்பதை எப்படி பிறர் அறிந்து கொள்வார்கள்?

இருதயத்தில் நிறைவினால் வாய் பேசும் (மத். 12:34) ஒருவருடைய பேச்சிலே ஆவியின் சிந்தை இல்லாமல் இருக்குமானால் அப்படிப்பட்டவர்களுடைய இருதயத்திற்குள் எந்த ஒரு நல்லதும் இல்லை என்பதற்கு இதைவிட நேரடியான ஆதாரம் எதுவுமே இல்லை. ஆகையால், அவர்களுக்கு ஜீவனும், சமாதானமும் என்பது பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றேயாகும். மனதை அடக்கி அது தொடர்பாக உள்ள நாவையும் அடக்க வேண்டும். ... உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் (மத். 12:37).

தேவன் விரும்பாத மொழி என்ன? முறுமுறுப்பு (பிலி. 2:16; 1கொரி. 10:10). பொய் (வெளி. 21:8) கெட்ட வார்த்தை (கொலோ. 3:8; எபே. 4:29). கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குதல் (யாத். 20:7). கோள் சொல்லுதல் (லேவி. 19:6; 1தீமோ. 5:13). குற்றம் கண்டுபிடித்தல் (மத். 7:3,5). கடினமான, அன்பற்ற வார்த்தை (நீதி. 31:26). ஓயாத ஒழுக்கு, சண்டை (நீதி. 19:13; 27:15). வழக்கு (1 தெச. 4:11; நீதி. 20:3) பதறிப் பேசுவது (பிரசங்கி 5:2; நீதி. 29:20) வீண் வார்த்தை (மத். 12:36). பிரியமானவர்களே, தேவன் விரும்பாத இம்மொழிகளை நாம் தவிர்த்தால்தான் ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்ததாக, அவர் கொடுக்கும் இந்த ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள ஒருவருக்கு நன்றியுள்ள இருதயம் தேவை. ஆவிக்குரிய வாழ்க்கை அழகு பெற நன்றி அவசியம். ....ஸ்தோத்தரியமல், தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:21) என்று தேவன் சொல்லுகிறார். எத்தனை காரியங்கள் நன்றி செலுத்துவதற்கென்று இருக்கிறது!! நம்முடைய வாழ்க்கைக்கே, அதாவது, உயிரோடு இருப்பதற்கே நன்றி சொல்ல வேண்டும். ஏதாவது சாவு வீட்டுக்கு போனால்தான் நாம் இதை உணர்கிறோமே தவிர மற்ற நேரங்களில் நாம் ஏதோ இப்பூமியில் நிரந்தரமாக இருக்கப் போகிறோம் என்று எண்ணி விடுகிறோம். கர்த்தர் நமக்கு கொடுத்த சுகத்துக்காக நன்றி சொல்ல வேண்டும். நம்மால் எழுந்து நடக்க முடியாது என்று சொல்லும் நாட்களுக்கு முன்பாக இப்போது கிடைத்துள்ள நாட்கள் எவ்வளவு சிறப்பானது என்பதை நாம் எண்ணுவதே கிடையாது. வேதாகமம் சுகத்தை விரும்புகிறது. பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்வது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருப்பாயாக. (யோவான் 2) என்றல்லவா நம் சுகம் பற்றி வசனம் சொல்லுகிறது!.

குடும்பம், நண்பர்கள், சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும்.

இறுதியாக, ஜீவனையும், சமாதானத்தையும் அடைய வேண்டுமானால், நமக்கும், தேவனுக்கும் உள்ள தொடர்புக்கோடு எப்போதும் சரியாக இருக்க வேண்டும். தேவன் சொல்வதை தொடர்ந்து கேட்கிறோமா? வசனத்தை வாசிப்பதன் மூலம்தான் தேவன் சொல்வதைக் கேட்க முடியும் (எபி. 1:1,2). ஆவிக்குரிய சிந்தையையும், சமாதானத்தையும் உலகப்பிரகாரமான பத்திரிக்கைகளோ, இதழ்களோ, வேறு எதுவோ கொடுக்கவே முடியாது. சமாதானம் இல்லையா? தேவனுக்கும், நமக்கும் உள்ள அந்த தொடர்பு கோட்டில் ஏதோ பிரச்சனை.

சரி, நாம் அடிக்கடி தேவனோடு பேசுகிறோமா? எல்லா நேரங்களிலும் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்தால் அவரோடு பேசுவது சுலபம். எத்தனை பேர் நம்மை சுற்றி இருந்தாலும், நாம் அமைதியாக நம் இருதயத்தை அவருக்கு நேராக்கி, அவரோடு பேசலாம். பிலி. 4:6,7ன் படி ....தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஆக, பிரியமானவர்களே சமாதானத்தை அடைய விரும்பி வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அந்த சமாதானம், அதாவது அவர் கொடுக்கும் சமாதானம் ஆவியின் சிந்தையினால் மட்டும் தான் கிடைக்கிறது. ஆவியின் சிந்தையை பெற்றுக் கொண்டு வாழ்வது எப்படி என்று வசனத்தோடு சேர்ந்து பார்த்தோம். தேவன் சொன்னவைகளை வேதத்தில் வாசித்தோம். இப்படிப்பட்ட அன்புள்ள தேவனுக்காக நன்றி சொல்லுவோம். ஆலோசனைக்கு செவி கொடுப்போம். சமாதானத்தை பெற்றுக்கொள்வோம். நிபந்தனைக்கு கட்டுப்படுவோம். தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்!! ❀

**அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

## கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதல் என்பது என்ன?

1. கிறிஸ்துவைத்தரித்துக் கொள்வதென்பது "**கிறிஸ்துவின் சிந்தையை**" சொந்தமாக்கிக்கொள்வது (பிலி. 2:5)
2. கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதென்பது " **இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது** " (1 பேதுரு 2:21)
3. கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதென்பது "**நாம் இயேசுவோடு இருக்கிறோம்**" என்று உணர்த்துவது (அப். 4:13)
4. கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதென்பது "**நம் முழு இருதயத்தோடும்**" கர்த்தரில் நம்பிக்கை வைத்து அவர் வழிகளில் நடப்பது (நீதி. 3:5,6).
5. கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதென்பது "**ஞானஸ்நானத்தில்**" புது சிருஷ்டியாவது (2 கொரி. 5:17).




# வாலிபனே ! இயேசுவைப் பின்பற்று

பிரியமான வாலிப உள்ளங்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இந்தக் கட்டுரையின் மூலமாக வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்களில் பெரும்பாலானோர் எந்த ஒரு காரியத்தையும் ஆதாயத்திற்காக செய்கிறவர்களாக இருக்கின்றனர். மற்றவர்களுக்கு சேவை செய்யும் மனப் பான்மை குறைந்து விட்டது, சுயநலம் பெருகி விட்டது. கர்த்தருக்கு ஊழியம் செய்ய வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் போது, அநேக வாலிபர்கள் கேட்கும் கேள்வி எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்பது தான். இந்தியாவில் கிறிஸ்தவ மார்க்கத் தைப் பற்றி ஒரு கருத்து நிலவுகிறத. அதென்னவென்றால், கிறிஸ்தவம் ஓர் இறக்குமதி மார்க்கம், இங்குள்ள கிறிஸ்தவர்கள் வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு அந்த மார்க்கத்தை இங்கு பரப்பிக் கொண்டிருக் கிறார்கள் ஏன்பது. அது ஒரு தவறான கருத்தாகும்.

உண்மையைச் சொல்லப்போனால் இயேசு கிறிஸ்து பிறந்த இடமும், அவர் ஊழியம் செய்த இடங்களும் நம் ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவைகளாகும். வெள்ளைக்கார சகோதரர்கள் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதாகமத்தை விசுவாசிக்கிறார்கள். அதில் தேவன் ஊழியம் செய்கிறவர்களை பொருளாதார உதவியால் தாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்து இந்தியாவில் கர்த்தருடைய ஊழியங்கள் நடைபெறுவதற்கு தேவனால் ஏவப்பட்டு பொருளாதார உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களில் பெரும்பாலோனார் "நாங்கள் கிறிஸ்தவர்களானால் எங்களுக்கு என்ன கிடைக்கும்? எங்கள் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமா? அல்லது ஏதேனும் சலுகைகள் கிடைக்குமா? என்று கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்துவோடு மூன்று வருடங்கள் இருந்து, அவர் செய்த அற்புத அடையாளங்களை நேரில் கண்ட அப்போஸ்தலனாகிய பேதுருவே கூட ஒரு கட்டத்தில் "இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்" என்று கேட்டார் (மத். 19:27). இன்றும் இயேசுவைப் பின்பற்ற விரும்பும் பலர் கேட்கும் கேள்வி இதுவாகத்தான் இருக்கிறது. பேதுரு வைப் பொறுத்தவரை அவரும், அவருடைய சகோதரனாகிய அந்திரேயாவும் முதலில் யோவான் ஸ்நானகனுடைய சீஷர்களாத்தான் இருந்தார்கள். பின்பு, அந்திரேயாவின் செல்வாக்கினால் பேதுரு கிறிஸ்துவினிடத்தில் அழைத்து வரப்பட்டார். அதிலிருந்து பேதுரு இயேசுவின் பிரியமான சீஷனாகவும், ஊழியக் காரனாகவும் மாறிவிட்டார் (யோ. 1:40-42).

**நாங்கள் கிறிஸ்தவர்களானால் எங்களுக்கு என்ன கிடைக்கும்? எங்கள் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமா? அல்லது ஏதேனும் சலுகைகள் கிடைக்குமா?**

> இன்று உலகெங்கும் சமாதானக் குறைச்சல் நிலவுகிறது. எங்குப் பார்த்தாலும், சண்டைகள், போர், குண்டு வெடிப்புகள் என்று தான் நாம் கேள்விப் படுகிறோம். சில சமயங்களில் அவைகளை நாம் பார்க்கவும் நேரிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் மக்கள் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இல்லாதது தான்.

பேதுரு கலிலேயக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இயேசு பேதுருவைப் பார்த்து "என் பின்னே வா உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக் குவேன்" என்றார். உடனே, பேதுரு வலைகளை விட்டுவிட்டு அவருக்குப் பின் சென்றான் (மத் 4:19,20). இயேசு பேதுருவினிடத்தில் ஏதோ ஒரு விசேஷித்தத் தன்மையைக் கண்டபடியால் தான் பேதுருவை ஊழியத்திற்கு அழைத்தார். அப்போஸ்தர்களுடைய பட்டியல் எல்லாவற்றிலும் இவருடைய பெயரே முதல் முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது மத். 10:4 ; மாற்கு 3:13-19 ; லூக். 6:12-16; அப். 1:13. மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் பேதுருவும், யாக்கோபும், யோவானும் இயேசுவோடு நெருங்கிய தொடர்பு வைத்திருத்தனர். யவீருவின் மகள் உயிரோ டெழுந்த சம்பவமாகட்டும்; மறுரூப மலைக்காட்சியாகட்டும் ; கெத்சமனேத் தோட்ட வேதனையூட்டும் வேளையாகட்டும் பேதுரு அங்கே இருந்தார். நம் இரட்சகரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் பேதுரு முதன்மையான இடத்தைப் பிடித்தார்.

சரி, இப்போது நாம் மத். 19:27 ஆம் வசனத்தில் பேதுரு இயேசுவை நோக்கி, "இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்கிற கேள்விக்குக் கடந்து செல்வோம். இந்த கேள்வி இன்றைய நாட்களில் கிறிஸ்துவைப் பின்பற்ற வருபவர்களாலும், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய வருபவர்களாலும் பெரும்பாலும் கேட்கப்படுகிறது. வாலிபக் கண்மணிகளே! நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் விலையேறப் பெற்றவை.

## I. கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் சமாதானம் கிடைக்கும்

இன்று உலகெங்கும் சமாதானக் குறைச்சல் நிலவுகிறது. எங்குப் பார்த்தாலும், சண்டைகள், போர், குண்டு வெடிப்புகள் என்று தான் நாம் கேள்விப் படுகிறோம். சில சமயங்களில் அவைகளை நாம் பார்க்கவும் நேரிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் மக்கள் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இல்லாதது தான். இயேசு சமாதானப் பிரபுவாயிருக்கிறார் (ஏசாயா 9:16). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படு வார்கள் என்று மலைப் பிரசங்கத்திலே இயேசு சொல்லியிருக்கிறார் (மத். 5:9).

நம்முடைய அருமை இரட்சகர் எதைச் செய்தாரோ அதையே உபதேசித் திருக்கிறார். எனவே, நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருந்தால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குதத்தத்தின்படி தேவனுடைய புத்திரர் என்னப்படு வோம். வாலிப உள்ளங்களே, இந்த பூமியிலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை. கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் என்று பவுல் நமக்கு புத்திமதிச் சொல்கிறார் (ரோ 12:18). (ஏசா 26:3) ன் படி நமக்குப் பூரண சமாதானம் கிடைக்கும். எனவே தான், நாம் தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதை உடையவர்களாய் இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் இந்த உலகத்தின் துன்பங்கள் நம்மை நெருக்கினாலும், நாம்

சமாதானமான ஜீவியத்தை ஜீவிக்கலாம். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவே நம்முடைய சமாதானக்காரணராயிருக்கிறார் (எபே. 2:14).

## II. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் பலன் கிடைக்கும்

இவ்வுலகில் நாம் செய்யும் எந்த கிரியைக்கும் பிரதிபலன் உண்டு. " நாம் கிறிஸ்துவினிமித்தம் நிந்திக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு, பலவிதமான தீமையான மொழிகளையும் நம் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் நாம் பாக்கியவான்களாயிருப்போம் ". பரலோகத்தில் நம் பலன் மிகுதியாயிருக்கும் (மத். 1:11,12). எனவே, நாம் கிறிஸ்துவுக்காக சில மனிதர்களுடைய இகழ்ச்சிக்கும் ஆளாகலாம். ஆனால், பிதாவானவர் நம்மை கனம் பண்ணுவார். இயேசுவைப் பின்பற்றுவதென்பது கடினமானது தான். ஆகையால் தான் இயேசு, ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றிக்கடவன் என்று சொன்னார். மேலும் இயேசு தம்மைப் பின்பற்றும்படி யாரையும் வற்புறுத்தவில்லை, ஒருவன் விரும்பினால் என்று சொல்கிறார். எனவே, நம் முழுவிருப்பத்தோடும், முயற்சியோடும் அவரைப் பின்பற்றினால் அவருக்காக நாம் எதையாவது இழந்து போனால், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனையாகவும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவோம் (மாற்கு 10:24,30). ஆகவே, பிரியமான வாலிபர்களே! கர்த்தருக்குப் பிரியமாக நாம் வாழும் போது இம்மைக்கான ஆசீர்வாதங்களையும், மறுமைக்கான ஆசீர்வாதங்களையும் பெறுவோம். கர்த்தர் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ! ஆமென்.

### புத்தாண்டுக்கான ஆலோசனைகள்

1. முறிந்த உறவை சீர்ப்பொருந்துங்கள். ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ. 3:13)
2. தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் (எபி. 13:16)
3. சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஈடுபடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் (ரோமர் 12:18)
4. தேவனோடு செலவிட நேரத்தை ஒதுக்குங்கள். இயேசு தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி, அங்கே தனிமையாயிருந்தார் (மத். 14:23)
5. உங்கள் சிந்தனைகளை மேலானவைகளில் பதியுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல; மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ. 3:2).

# இயேசு ஓர் ஆசிரியர்

ABEL R. NAYAGAM

இயேசு கிறிஸ்து மிகச் சிறந்த ஓர் ஆசிரியர். தன்னைச் சுற்றிலும் இருந்த மக்களை சிந்திக்க வைக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. அன்றாட வாழ்க்கையில் இருந்தே உதாரணங்களை அவர் பயன்படுத்தினார். ஒரு சீஷனுடைய கடமை என்னவென்றால் தன் எஜமான் கற்றுக் கொடுத்ததை சரியாக நினைவில் வைத்துப் பிறருக்கு அதை எடுத்துச் செல்வதாகும்.

தம்பி, தங்கைகளே! நாம் ஒவ்வொருவரும் இயேசுவுக்கு மாணவ, மாணவிகள். எனவே இயேசு கற்பித்தவைகளில் சில உதாரணங்களை நாம் இம்மாதம் பார்ப்போம்.

**உப்பாயிருங்கள்** (மத். 5:13)

உணவுக்கு சுவை கொடுப்பதற்காக உப்பு பயன்படுத்தப்படுகிறது. குளிர்சாதனப் பெட்டிகள் இல்லாத காலத்தில் உப்பை பயன்படுத்தி உணவு கெடாமல் பாதுகாக்கப்பட்டது.

நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நாம் வரும் புதிய ஆண்டில் உப்பைப் போல பிறருக்குப் பயன்படுகிறவர்களாயிருப்போம்.

**வெளிச்சமாயிருங்கள்** (மத். 5:14,16)

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்க கூடாது. விளக்குத் தண்டின் மேல் வைக்க வேண்டும். அப்போதுதான் அது வீட்டில் உள்ள அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். நம்முடைய ஒவ்வொரு கிரியையின் மூலமும் பிதா மகிமைப்படும் படியாக நம்முடைய வெளிச்சம் உலகத்தில் பிரகாசிக்க வேண்டும். நாம் அப்படிப் பிரகாசிக்கலாமா?.

**கோபங் கொள்ளக்கூடாது** (மத். 5:21,26)

சிறுபிள்ளைகளே, கோபம் என்றால் என்ன? என்பது உங்களுக்குத் தெரியும். இயேசு கோபம் கொள்ளக் கூடாது என்கிறார். உங்கள் கூட இருப்பவர்களை காரணமில்லாமல் கோபித்துக் கொள்ளக் கூடாது. உன்னோடு இருக்கும் உன் நண்பர்களை மூடனே, அட முட்டாளே என்று யாரையும் சொல்லக்கூடாது எப்போதும் அன்பாகப் பேசி, பழக வேண்டும்.

இன்னும் நாம் சண்டை போடக் கூடாது. சிறுபிள்ளைகளாகிய நாம் எதற்கெடுத்தாலும் சண்டை போடுவோம் அது கூடாது. (மத். 5:43, 48). பிறருக்கு கொடுக்க வேண்டும். சிறிய வயதில் இருந்தே நம்மிடம் இருப்பதை பிறருக்கு கொடுத்துப் பழகும்போது தேவன் அதைப் பார்த்து நம்மை ஆசீர்வதிப்பார்.

அடுத்து, உன் நண்பர்களுடன் பழகும் போது குற்றம் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்க கூடாது.

**கேள், தேடு, தட்டு (மத். 7:7-12)**

கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும் இந்த உண்மையைப் புரிந்தவர்களாக இந்தச் சிறு பிராயத்திலிருந்தே வாழ வேண்டும்.

**இயேசுவின் போதனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்**

அருமைப் பிள்ளைகளே! இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் வந்திருக்கும் உங்களுக்கு பிரயோஜனமான பாடங்கள் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். இயேசு போதித்த போதனைகள் சிறிய வயதிலிருந்து நீங்கள் பெரியவர்களாகும் வரை உதவியாய் இருக்கும். எனவே, இயேசுவின் போதனைக்கு கீழ்ப்படியுங்கள். மறந்து விடாதீர்கள்.

புதிய ஆண்டுக்குள் (2013) செல்லும் போது இயேசு உங்களுக்கு சிறந்த ஆசிரியர் என்பதை நினைவில் வைத்து, அவர் கற்றுக் கொடுத்த இந்த பாடங்களை மறவாமல் தினமும் கைக்கொள்ளுங்கள் ❀

## "Happy New Year"

## உங்கள் சிந்தனைக்கு

ஒரு கிறிஸ்தவ விவசாயி ஒரு பட்டணத்திற்குப் போயிருந்தார். அவர் அங்கிருந்த ஒரு பெரிய உணவகத்திற்கு மதிய உணவிற்காகச் சென்றார். அந்த உணவகத்தில் உட்கார்ந்திருந்த வாலிபர்களுக்கு அருகிலிருந்த மேஜையில் அவர் உட்கார்ந்தார். அவருக்கான உணவு பரிமாறப்பட்டபோது, அவர் தலையைத் தாழ்த்தி, தரப்பட்ட உணவிற்காக நன்றி செலுத்தி தேவனிடம் ஜெபித்தார். அவர் அருகிலிருந்த வாலிபர்களில் ஒருவன் உரத்த சத்தமிட்டு, "ஏய் விவசாயி, நீ எங்கிருந்து வருகிறாயோ அங்கே எல்லோரும் இப்படி ஜெபிக்கிறார்களா?" என்றான்.

அந்த விவசாயி தன் ஜெபத்தை முடித்து விட்டு அமைதியாக "இல்லை, மகனே "பன்றிகள்" இப்படி ஜெபிப்பதில்லை" என்று பதிலளித்தார்.

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே!

சென்ற மாதத்தில் விபச்சாரத்தைக் குறித்தும், விவாகரத்து குறித்தும் பார்த்தோம். அதைப்பற்றி இன்னும் அதிகமாகப் பேசலாம் என்றாலும் நம்முடைய நோக்கம் தவறாமல் இருப்பதற்காக நாம் அடுத்த கருத்திற்கு செல்வோம்.

மத். 5:33, "அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்ட தென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்றார். மக்கள் பொய் சத்தியம் செய்யாமல் கர்த்தருக்கு பயந்து உண்மையையே சொல்லுவார்கள் என்பதற்காகவும் இஸ்ரவேலிலே உண்டாகும் வழக்குகளில் நீதியான தீர்ப்பு சொல்லப்படுவதற்கும் கர்த்தர் முன்னிலையாக சொல்லப்படும் ஆணைகள் உதவியாயிருக்கும் என்று தேவன் எண்ணியிருக்கலாம். ஆனால், மக்கள் பொய் சத்தியத்தையும் செய்ததால் அவர் நீ சத்தியம் பண்ண வேண்டாம் என்று பழைய ஏற்பாட்டிலும் அறிவுறுத்தி யிருந்தார். அதுவும் அந்த சத்தியத்தை அவர்கள் தேவன் நியமித்திருந்த இடத்திலே சொல்லாமல் அவர்களாகவே உண்டாக்கிக் கொண்ட இடங்களில் சொன்னார்கள். ஆகையால், கர்த்தர் "இஸ்ரவேலே, நீ சோரம் போனாலும் யூதாவாகிலும் அந்த பாவத்துக்குள்ளாகாதிருப்பதாக; கில்காலுக்கு வராமலும், பெத்தாவேலுக்குப் போகாமலும் கர்த்தருடைய ஜீவனாணை என்று ஆணையிடாமலும் இருப்பீர் களாக", (ஓசி. 4:15) என்று அவர்களைக் கடிந்து கொள்கிறார்,

ஆகவே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் எதன் பேரிலும் எந்த சூழ்நிலையிலும் ஆணையிட வேண்டாம். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். அப்படி மாற்றிச் சொல்ல விரும்பினால் அது தீமையினால் உண்டாயிருக்கும் என்றார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்; வானத்தின் பேரில் சத்தியம் பண்ண வேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம், பூமியின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும், கருப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்ல தென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் " என்றார் (மத். 5:34,37).

இன்றைய காலங்களில் அநேகர் அடிக்கடி சத்தியம் பண்ணுகிறதைப் பார்க்கிறோம். கிறிஸ்தவர்களே அப்படிச் செய்கிறார்கள் இதன் மூலம் அவர்கள் தேவனுடைய சட்டத்தை மீறி பாவம் செய்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய

ஏற்பாட்டு சத்தியமாக ஆண்டவர் நமக்கு போதித்த உடன்படிக்கையின்படி சத்தியம் செய்யாமல் உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்று மட்டுமே சொல்ல வேண்டும்.

| நிழல் | நிஜம் |
|---|---|
| பொய்யாணையிடம் உன் ஆணைகளை கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக. | நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம். |

பழைய ஏற்பாடு எவ்வளவு கடுமையாயிருந்தது என்பதை நாம் இப்பொழுது புரிந்து கொள்ள முடியும். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப் பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்கள் (மத். 5:38; யாத். 21:24,25) இருவர் சண்டை பண்ணுகிறபோது ஒருவனால் மற்றவனுக்கு கை, கால், கண், பல் அல்லது காது போன்ற உறுப்புக்கள் சேதமடைந்தால், அடித்தவனை பிடித்து வந்து அதே போல அவனுடைய உறுப்பையும் சேதப்படுத்த வேண்டும் அல்லது வெட்டி எடுக்க வேண்டும். சண்டைகளில் காயம் ஏற்பட்டால் ஏற்படுத்தினவனை அழைத்து வந்து அதே போல அவனுக்கு காயம் உண்டாக்க வேண்டும். இதனால் அந்த தேசம் தினமும் இரத்த வாடை வீசுகிற தேசமாயிருந்திருக்கும். மன்னிப்பு என்பது இல்லை. மேலும் நாம் சென்ற மாதங்களில் இஸ்ரவேலர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள் மட்டுமல்ல பொருளாசைக்காரர்களாகவும் இருந்தார்கள். ஏன் இராஜாக்களே அப்படியிருந்தார்கள். ஆகாப் ராஜா தன் மனைவியாகிய யேசபேலின் பேச்சைக் கேட்டு நீதிமானாகிய நாயேத்தை கொலை செய்து அவன் திராட்சத் தோட்டத்தை எடுத்துக் கொண்டான் (1 இராஜா 21,29). அவன் கடைசி நாட்களில் மனந் திரும்பினான் என்பதைப் போல இருந்தாலும் தன் சந்ததிக்கு அழிவை தேடி வைத்து விட்டுப் போனான்.

ஆனால், இயேசு கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார்... "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு, ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப்பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாத" (மத். 5:39,42) இது புதிய ஏற்பாடு, ஒருவன் நமக்கு தீமை செய்து கொண்டிருக்கும் போதே அவனை நம்முடைய மனம் மன்னித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால், ஒரு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவன் தீமை செய்தவனுக்கு பதிலாக தீமை செய்யாமல் அமைதியாக இருப்பின். தீமையை சகித்துக் கொண்டு அதே வேளையில் அப்பொழுதே மன்னித்துக் கொண்டிருப்பான் கிறிஸ்தவன். தொடர்ந்து ஒருவன் தீமை செய்து வந்தால் அவனோடு நம்மால் ஐக்கியம் கொள்ள முடியாமல் போகலாம். ஆனால், அவனுக்கு தீமை செய்வதில்லை என்பது ஒரு கிறிஸ்தவனுடைய முடிவாயிருக் கிறது. கிறிஸ்தவர்களே கிறிஸ்தவர்களை ஏமாற்றுவது வஞ்சிப்பதுமான காலமாக இந்த காலம் இருக்கிறபடியால் பணம் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் நாம்

ஜாக்கிரதையாயிருப்பது மிகவும் பிரயோஜனமாயிருக்கும். கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே என்கிறார். இன்றைய காலத்தில் கொடுத்த பணத்தை அல்லது பொருளைத் திருப்பிக் கேட்டால் விரோதம் தான் மிஞ்சுகிறது. ஆகவே நாம் இழந்துவிடத் தயாராக இருந்தால் கொடுக்கலாம். கொடுத்தது திரும்பி வந்தால் அது நம்முடையது இல்லையென்றால் அதை இழந்து விட ஆயத்தமாயி ருக்கிறேன் என்பவர்கள் கடன் கொடுக்கலாம். கொடுத்தது திரும்பி வந்தால் அது நம்முடையது இல்லையென்றால் அதை இழந்து விட ஆயத்தமா யிருக்கிறேன் என்பவர்கள் கடன் கொடுக்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் வாழ்க்கை யில் இவைகள் அனைத்தையும் செய்து காட்டினால் அவரை ஒரு கன்னத்தில் அறைந்தார்கள் அவர் மறு கன்னத்தில் அறைவதையும் தடை செய்யவில்லை. அவர் முகத்தில் துப்பினார்கள் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் அணிந்திருந்த ஒரு உடையையும் எடுத்துக் கொண்டார்கள் அதற்கும் அவர் ஒன்றும் சொல்லவில்லை, அவரை அவமானப்படுத்தி அற்பமாக எண்ணி சாவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால், அவர் அதற்கும் ஒன்றும் சொல்லவில்லை பதிலாக அவர்களுக்கு ஒரு தீமையும் வந்து விடக்கூடாது என்று அவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டுதல் செய்தார். நாமும் இன்றைக்கு அவரைப் போல மாற வேண்டும் என்பது தான் கிறிஸ்தவம். " கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது " (பிலி. 2:5).

| பழைய ஏற்பாடு நிழல் | புதிய ஏற்பாடு நிஜம் |
|---|---|
| கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் | தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் |

தொடர்ந்து தீமை செய்கிறவர்களை விட்டு விலகியிருக்கும்படி ஆண்டவர் வேறு வசனங்கள் மூலமாக நம்மை வலியுறுத்துகிறார்.

உனக்கடுத்தவனை சிநேகித்து, உன் சத்துருவை பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விபட்டிருக்கிறீர்கள் (மத். 5:43; உபா. 23:3-6). பழைய ஏற்பாட்டின் காலத்தில் பகைகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. அது நீங்க வில்லை. முக்கியமாக இஸ்ரவேலர்கள் புறஜாதிகள் என்ற பகை கிறிஸ்துவின் சிலுவை வர நீடித்திருந்தது (எபேசி. 2:14). ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்கிறார். இந்த வார்த்தைக்காக உலகத்திலேயே கிறிஸ்துவும் அவருடைய மார்க்கமும் மேலோங்கி நிற்கிறது. ஒருவன் மற்றவனை அவதூராக பேசினால் அப்பொழுதே அந்த மற்றவன் தன்னை அவதூராகப் பேசினவனை திருப்பிப் பேசுவது என்பது இன்றைக்குக் கண்கூடாக நடக்கிற நிகழ்ச்சிகளாயிருக்கிறது. கைகலப்பு அடிதடி இவைகள் எல்லாம் உலகத்திலே ஒரு பொழுதுபோக்கு அம்சங்களாக இருக்கிறது. ஏன் பிள்ளைகள் விளையாடுகிற வீடியோ கேம்களில் கூட போட்டி, சண்டை, கொலைகள், சர்வ சாதாரணமாக இருக்கிறது. வீடியோகேம் விளையாடும் ஒரு பையனை சாப்பிட தாய் அழைத்தால் நான் நான்கு பேரை கொன்று விட்டு வருகிறேன் என்று சொல்லுகிற அளவிற்கு மனித சமுதாயம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. பிள்ளைகள் மனதில் நவீன உலகம் எதை விதைக்கிறது

என்பதை கிறிஸ்தவர்களும் கவனிப்பதில்லை. நாளைக்கு அந்த பையன் பெரியவனாக வளர்ந்து கார் வைத்திருக்கு வசதி படைத்தவனானால் கார் ஓட்டும் போது வழி கிடைக்கவில்லையானால் அதற்காக நடந்து அல்லது சைக்கிளில் செல்பவரை அற்பமாக எண்ணி காரை ஏற்றி விட்டு செல்லமாட்டான் என்பது என்ன நிச்சயம்.

ஆகையால் பிள்ளைகளுக்கு வீடியோ கேம் விட வேத வசனத்தை படிப்படி கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கொள்வது அவர்களுக்கு வரப்போகிற நாட்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அது பிரயோஜனமாயிருக்கும். ஆனால் இந்த சமீப வருடங்களில் சண்டே கிளாஸ், வி.பி.எஸ் போன்றவைகள் வேதத்தில் எங்கேயிருக்கிறது. அவைகள் நடத்துவது பாவம் என்று சொல்லுகிற கூட்டம் ஒன்று விகற்பமாக முளைத்திருக்கிறது.

| பழைய ஏற்பாடு நிழல் | புதிய ஏற்பாடு நிஜம் |
|---|---|
| உன் சத்துருவை பகைப்பாயாக | உங்கள் சத்துருக்களை சிநேசியுங்கள். |

இயேசு கிறிஸ்துவும் அவருடைய சத்துருக்கள் மேல் அன்பு செலுத்தி அவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் சிலுவையில் கெஞ்சினார் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். நாம் சத்துருக்களை சிநேசிப்பதினால் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதினால் பிதாவானார் கிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய பாவங்களை மன்னிப்பார். அதோடு நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப் போம். அப்படிச் செய்ததால் கிறிஸ்துவும் தேவனுடைய குமாரனாக இருக்கிறாரே! நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; (மத். 5:44,45).

பிதாவானவர் எப்படிப்பட்ட குணம் நோக்கம் உள்ளவராயிருக்கிறார் என்பதை அடுத்த வசனங்களில் சுட்டிக்காட்டுகிறார். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ள வர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத். 5:45:6).

உங்கள் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்க ளுக்குப் பலன் என்ன? ஆயக்காரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? (மத். 5:46). இந்த வசனத்தின்படி நாம் இன்றைக்கு நம்மை சிநேகிப்பவர்களையே சிநேகித்தால் நாமும் பழைய ஏற்பாட்டு மக்களாகத்தானே இருக்கிறோம். ஆனால், உபதேசத்தை தவறாக போதிக்கிறவர்களோடும் தேவனுடைய ஊழியத்தை அற்பமாக எண்ணி, சுயநலத்திற்காக அதைக் கெடுக்க வேண்டும் எண்ணுகிறவர் களோடும், கெடுக்கிறவர்களோடும் நாம் உறவு (ஐக்கியம்) கொள்ள முடியாது.

" உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால்,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் " (மத். 5:47,48). இந்த வசனங்களின்படி சத்துருவை சிநேகிக்க வேண்டும், உதவி செய்ய வேண்டும் (தேவன் சூரியன் மழை யை அவர்களுக்கும் கொடுப்பது போல) அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டும். இவைகளை நாம் ஏன் செய்ய வேண்டும் அவர்களும் மனந்திரும்பி பரலோக ஆசீர்வாதங்களை பெற வேண்டும். அந்த ஆத்துமாவும் கெட்டுப் போகாமல் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திலே தேவனோடு என்னைப் போல வாழ வேண்டும் என்கிற உயர்ந்த எண்ணத்தோடு அவைகளை செய்ய வேண்டும். சில நேரங்களில் அவர்கள் நம்மை தங்கள் பக்கம் இழுக்க முயற்சி செய்வார்கள். நாம் அவர்களைப் புரிந்து கொண்டு அவர்கள் தவறை புரிந்து கொணடு, அவர்களை உணர்த்த வேண்டும் முடியாவிட்டால் விலகிவிடுவது நல்லது. ஆனால், நம்முடைய நோக்கம் எல்லா ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பேத (மத். 28:19, 20; 1 தீமோ. 2:4).

நாங்கள் ஒரு தடவையில் ஒரு குடும்பத்தை சந்திக்க சென்றோம். வேதத்தை படிப்பதற்காக அவர்கள் எங்களை அழைத்திருந்தார்கள். வேதாகமத்தைப் படித்துக் கொண்டு வரும்போது அவர்களுடைய மனதில் ஒரு கேள்வி எழும்பியது. வேதத்தின்படி ஓய்வு நாள் என்றைக்கு? என்று எங்களிடம் கேட்டார்கள். நாங்கள் நீங்களே சொல்லுங்கள் என்று சொன்னோம். அவர்கள் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்து ஞாயிற்றுக்கிழமை தான் ஓய்வு நாள் என்றார்கள். அவர்கள் கொடுத்த இரண்டு விளக்கங்கள் என்னவென்றால்; ஆங்கிலேயர்கள் வேதாகமம் நன்று தெரிந்தவர்கள் அவர்கள் ஏன் ஞாயிற்றுக்கிழமையை அலுவலகங்களுக்கு விடுமுறை நாளாக ஏற்படுத்தினார்கள் என்றால் அது ஓய்வு நாள் எல்லோரும் "சர்ச்" க்கு போக வேண்டும் என்பதற்காக, இது அவர்களின் முதலாவது விளக்கம். இரண்டாவது என்னவென்றால் எங்களுடைய பாஸ்டர்கள் பெரிய படிப்பெல்லாம் படித்து அதன்பிறகு வேதாகமத்தை பல மொழிகளில் படித்து அவர்கள் தெளிவாக போதிப்பதும் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள் என்பதுதான். ஆகவே ஞாயிற்றுக் கிழமை தான் வேதத்தின்படி ஓய்வு நாள் என்ற ஒரு பெரிய விளக்கத்தையே கொடுத்தார்கள். அவர்களைப் பார்க்கும் போது எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏனென்றால், அவர்களின் நம்பிக்கையிலே அவர்கள் உறுதியாயிருந்தார்கள். ஆனால், அவர்கள் வேதத்தைத் திறந்து அதிலிருந்து ஒரு வசனத்தையும் சுட்டிக்காட்டவில்லை, அவர்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் சொன்னதை அப்படியே நம்புகிறவர்களாயிருந்தார்கள்.

ஆகையால், அவர்களை சிந்திக்க வைப்பதற்காக நாங்கள் ஒரேயொரு வசனத்தை பயன்படுத்தி அதன்பிறகு ஒரு கேள்வியை கேட்டோம். நாங்கள் பயன்படுத்திய வசனம் மத். 28:1 "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் " என்பதே. நாங்கள் கேட்ட கேள்வி இயேசுவானவர் உயிர்த் தெழுந்தது ஓய்வு நாள் அல்ல, ஓய் நாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஆகையால், எந்த நாளில் இயேசுவானவர் உயிர்த் தெழுந்தார் என்றோம் இந்த வசனத்தில் அவ்வளவு தெளிவாக இருக்கவில்லை என்றார்கள். ஆகையால், நாங்கள் இன்னொரு வசனத்தை பயன்படுத்த வேண்டியதாயிருந்தது அந்த வசனம் (மாற்கு 16:9), "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு மகதலேனா மரியாளுக்கு முதல்

முதல் தரிசனமானார். இதில் தெளிவாக வாரத்தின் முதல் நாள் என்று சொல்லப் பட்டிருப்பதால் அவர்கள் மனதளவில் ஒரு முடிவுக்கு வந்து, திங்கட்கிழமை இயேசு உயிர்த்தெழுந்தார் என்றார்கள். ஏனென்றால், ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதல் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று வேதாகமம் சொல்வதால் ஞாயிற்றுக் கிழமை முடிந்து திங்கட்கிழமை அதிகாலையில் இயேசு உயிர்த்தெழுந்தார் என்றார்கள். இதைக் கேட்ட பொழுது நாங்கள் அதிர்ச்சியடைந்தோம். அவர்கள் வேதத்தை தேவனுடைய வார்த்தையை நம்புவதை விட மனிதர்களையும் அவர்கள் போதித்த தையும் அதிகமாக நம்பினார்கள். அவர்களுடைய இந்த பதில் உங்களுக்கும் அதிர்ச்சியாயிருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

இதற்காக நாங்கள் அவர்களிடத்தில் மேலும் சில கேள்விகளைக் கேட்டு அதற்கு விளக்கங்கள் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது அதை திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்களுக்கும் இந்த மாத இதழ் மூலமாக தெரியப் படுத்துகிறோம்.

1. முதலாவது நாங்கள் அவர்களுக்குச் சொன்னது : நாம் பயன்படுத்து கின்ற கிழமைகளின் பெயர்கள் அதாவது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகியவை வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை.

2. திங்கட்கிழமை இயேசுவானவர் உயிர்த்தெழுந்திருந்தால் ஈஸ்டர் பண்டிகையென்று இயேசுவின் உயிர்த்தெழுந்த நாளை ஞாயிற்றுக்கிழமையில் நீங்கள் கொண்டாடுவது ஏன்? என்றோம் அவர்கள் குழப்பத்தின் உச்சத்திற்கு சென்றார்கள்: விளக்கத்தை அடுத்த மாதம் கவனிப்போம் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!.

(தொடரும்)

## புதிய ஆண்டில் ஏன் இப்படி இருக்கக்கூடாது?

1. தேவ மகிமைக்காய் ஏன் வாழக்கூடாது?
2. பரலோக பாக்கியத்திற்கானவைகளாக ஏன் முயற்சிக்கக் கூடாது?
3. பாவத்தை விட்டு ஏன் ஓடக்கூடாது?
4. முற்றிலும் ஆன்மீக சிந்தையுள்ளவர்களாக ஏன் மாறக்கூடாது?
5. எல்லாவற்றிலும் ஏன் தாழ்மையாயிருக்கக்கூடாது?
6. எல்லாவற்றிலும் ஏன் இச்சையடக்கமாயிருக்கக்கூடாது?
7. நம்முடைய வார்த்தைகள் ஏன் கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்திருக்கக்கூடாது?
8. நித்தியத்திற்கான காரியங்களில் ஏன் வளரக்கூடாது?
9. முழுமையான கிறிஸ்தவர்களாக ஏன் வாழக்கூடாது?



# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம்-25. பண்டிகைகள்

K. பாஸ்கர்

டிசம்பர் மாதம் வந்துவிட்டால் கிறிஸ்தவ சமுதாயத்தின் மத்தியில் ஒரு பரபரப்பு, சுறுசுறுப்பு வந்து விடுகிறது! காரணம், கிறிஸ்துமஸ் பண்டிகைக் கொண்டாட்டத்திற்கு ரெடியாகிவிடுவார்கள். வருட முழுவதும் சர்ச்சுக்கு போகாதவர்கள் கூட அப்பொழுது போக ஆரமபித்து விடுவார்கள். பண்டிகை முடிந்தவுடன் அவர்கள் சர்ச்சுக்கு போவதையும் முடித்து விடுவார்கள்.

அன்பான வாசகர்களே, இதுவா கிறிஸ்தவம்! வசன ரீதியான கிறிஸ்தவத்தில் இவ்வாறு இல்லை! பண்டிகைகளைக் குறித்து வேதம் என்ன கூறுகின்றது என்று அறிந்து அதற்கு நம்மைக் கீழ்ப்படித்த ஒப்புக் கொடுப்போம்!.

## I கிறிஸ்துவின் பிறப்பு

கிறஸ்தவ சமுதாயத்தின் மத்தியில் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து நிறைய கற்பனைகளும், யூகங்களும், பாரம்பரியங்களும் இருக்கிறது. அது என்ன வெனில், இயேசு கிறிஸ்து டிசம்பர் 25 ஆம் தேதி பிறந்தார் என்றும், மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்றும், கந்தை துணியில் சுற்றப்பட்டார் என்றும், ஆடு மேய்ப்பவர்கள், மூன்று சாஸ்திரிகள் எல்லாரும் மாட்டுத் தொழுவத்ததில் மரியாளை யும், இயேசுவையும் வணங்கினார்கள் என்றும் அவர்களின் நம்பிக்கையாக இருக்கிறது!.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷப் புத்தகத்தில் தெளிவாய் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அது என்னவெனில், ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள் (மத். 2:1,2).

லூக்கா எழுதம் போது, அந்நாட்களில் உலகமெங்கும் குடி மதிப்பு எழுதப் பட வேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உணடாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும் தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே தனக்கு

மனைவியாக நியமிக்கப்பட்டு கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில் அவளுக் குப் பிரசவ காலம் நேரிட்டது அவள் தன் முதற் பேரான குமாரனைப் பெற்று சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லா திருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னனையிலே கிடத்தினாள். அப்பொழுது, அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள் (லூக். 2:1-8).

இந்த இரண்டு வசனப் பகுதிகளிலும் இயேசு கிறிஸ்து டிசம்பர் 25ந் தேதி பிறந்தார் என்றும் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்றும் கந்தை துணிகளில் சுற்றப்பட்டார் என்றும் சொல்லவில்லை. வீணான கற்பனை களுக்கும், யூகங்களுக்கும் ஏன் நாம் இடங்கொடுக்க வேண்டும்! மேலும், காலநிலையும் அதற்கு ஒத்து வரவில்லை. எப்படியென்றால், இயேசு பிறந்த பொழுது, மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந் தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. பாலஸ்தீன பகுதி மலைப்பகுதி. குளிர் காலங்களில் மிகவும் அதிகமான பனி, குளிர் இருக்கும். குளிர் காலங்களில் மேய்ப்பர்கள் மந்தையை வயல் வெளியில் தங்க வைக்கமாமட்டார்கள். வெயில் காலங்களிலே மட்டுமே தங்கள் மந்தையை வயல் வெளியில் தங்க வைப்பார்கள்! எனவே, இயேசு கிறிஸ்து குளிரும், பனியும் கொட்டுகையில் கோமகனாகத் தொட்டிலிலே பிறக்கவில்லை! அவர் வரலாற்று உண்மைப்படியும், வேத வசனப் படியும் பிறந்தார். ஆனால், தேதி குறிப்பிடப்படவில்லை. மறைவானவைகள் நம்முடைய தேவனாகியக் கர்த்தருக்கே உரியவைகளாகும் (உபா. 29:29).

## II பண்டிகைகளைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலருக்கு தேவன் பல பண்டிகைகளைக் கொடுத்தார். வருஷத்தில் மூன்று தரம் எனக்கு பண்டிகை ஆசரிப்பாயாக. அவை புளிப்பில்லா அப்பப் பண்டிகை (இது பஸ்கா பண்டிகை). அறுப்புக்கால பண்டிகை மற்றும் சேர்ப்புக்கால பண்டிகை (இது கூடாரப் பண்டிகையும்) அதைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளையைக் கொடுத்தார் (யாத். 23:14,17) நாளடைவில் அவர்கள் தேவனுடைய கட்டளைகளையும், பரிசுத்தத்தையும், பக்தியையும் விட்டுவிட்டார்கள். ஆதலால் தேவன் அவர்களுடைய பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன் அவர்களுடைய ஆசாரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை என்று கூறிவிட்டார். (ஆமோஸ் 5:21)

மேலும், ஏசாயா தீர்க்கதரிசி மூலம் உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன் என்று கூறுகின்றார். (ஏசா. 1:14) ஓசியா தீர்க்கதரிசி கூறும் பொழுது அவருடைய

எல்லா மகிழ்ச்சியையும், அவருடைய பண்டிகைகளையும் " அவருடைய மாதப் பிறப்புக்களையும் அவருடைய ஓய்வு நாட்களையும், சபை கூடுகிற அவளுடைய எல்லா ஆசாரிப்புகளையும் ஒழியப் பண்ணுவேன் " என்று இஸ்ரவேலர்களைக் குறித்துக் கூறுகின்றார் (ஓசி. 2:11).

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு அதாவது, கிறிஸ்தவர்களாக மாறும்பொழுது பண்டிகை கொண்டாட்டங்களுக்கு நாம் விலகியிருக்கும்படி தேவனுடைய வசனம் கூறுகின்றது. ஆகையால், போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது பண்டிகை நாளையும், மாதப் பிறப்பையும் ஓய்வு நாட்களையும் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப் படுத்தாதிருப்பானாக... இவையெல்லாம் அனுபவிக்கிறதினாலே அழிந்து போகுமே என்று! (கொலே. 2:16,22).

கிறிஸ்துமஸ் என்ற பண்டிகை வேதத்தில் இல்லாத ஒன்றாக இருக்கிறது. வேதத்தில் இல்லாத இந்தப் பண்டிகைக்கு அநேகர் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆனால், வேதத்திலுள்ள கிறிஸ்துவின் உபதேசத்தையும், பண்டிகையைக் குறித்து தேவன் சொல்லுகிறதையும் யாரும் அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை! கிறிஸ்தவ மார்க்கம் என்பது கிறிஸ்துவையும், அவரது உபதேசத்தையும் மையமாகக் கொண்டது. கிறிஸ்துவுக்கு வெளியே அதாவது, அவரது உபதேசத்திற்கு வெளியே கிறிஸ்தவ மார்க்கம் இல்லை; இந்தப் பண்டிகையும் கிறிஸ்துவுக்கு வெளியே தான் உள்ளது. எனவே, தயவு செய்து சிந்தியுங்கள். கிறிஸ்துமஸ் என்பது கிறிஸ்துவின் உபதேசத்திற்கு முரண்பாடானது.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் கொண்டாடவில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்து இவ்விதமான பண்டிகைகளைக் குறித்து எதுவம் கூறவுமில்லை, கட்டாளையுமில்லை, ஆதி கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42). மற்றபடி கிறிஸ்துமஸ் கொண்டாடவில்லை. இதை நாம் விசுவாசிக்க வேண்டும், விசுவாசம் தேவனுடைய வசனத்தின் மூலம் வரும் (ரோமர் 10:17) விசுவாசத்தினால் வராதயாவும் பாவமே (ரோமர் 14:23).

கிறிஸ்துமஸ் என்பது வேதத்தின்படி வரவில்லை! அந்நிய மதத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. எப்படியென்றால் எகிப்து தேசத்தின் மக்கள் விக்கிரக வழிபாடு செய்கிறவர்கள். கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் அந்நாட்டிலுள்ள அலெக்சாண்டிரியா என்ற நகரில் மே 20ல் அவர்களின் பூசாரி இறந்து விட்டால், அந்தப் பூசாரி நினைவாக அவருக்கு பூஜை செய்வார்கள். இக்கொள்கைப்படி தான் ரோம கத்தோலிக்கர் பரிசுத்தவான்களுக்கு பூஜை செய்வார்கள். அதே போல கிறிஸ்துவுக்கும் ஒரு பூஜை என்று துவங்கினார்கள். மற்றபடி வேதத்தின்படியல்ல! முதலில் அவர்கள் மே 20ல் கிறிஸ்துமஸ் கொண்டாடினார்கள். பிறகு ஏப்ரல் 4ல் கொண்டாடினார்கள். அதன்பிறகு ஜனவரி 6க்கு மாற்றினார்கள். அப்போது ரோம கத்தோலிக்கத்திலிருந்து கிரேக்க ஆர்த்தோடெக்ஸ் என்ற சபை பிரிந்து சென்றது. இன்றும்

கிரேக்க ஆர்த்தோடெக்ஸ் சபையினர் ஜனவரி 6ந் தேதி கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்கள். பின்பு 16ம் நூற்றாண்டில் ரோம கத்தோலிக்க சபையினர் கிறிஸ்துவின் பிறந்த நாள் டிசம்பர் 25 என அறிவித்தார்கள். அது முதல் எல்லா பிரிவு கூட்டத்தினரும் டிசம்பர் 25ல் கிறிஸ்துமஸ் கொண்டாடுகின்றனர். மற்றபடி வேதத்தின்படியல்ல! ஆனால், ஆதி சபையான கிறிஸ்துவின் சபை இந்த மனித கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் தன் மணவாளன் இயேசு கிறிஸ்துவுக்கு கற்புள்ள கன்னிகையாக பரிசுத்தமாக இருக்கிறது (2 கொரி. 11:2). இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையின் போது தமது சபையை மட்டும் தமக்கு முன்பாக நிறுத்திக் கொள்வார் (எபே. 5:27).

## III தேவன் விரும்பும் பண்டிகை எது?

பண்டிகை கொண்டாட வேண்டும் என்றால் தேவன் விரும்பும் பண்டிகை ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டாட வேண்டும். அது என்னவெனில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பழைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று வாயினாலே அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று புது வாழ்க்கையை வாழுவதே தேவன் விரும்பும் பண்டிகையாக உள்ளது. ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால், பழைய புளித்தமாவோடே அல்ல. துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். என்று தேவனுடைய வசனம் கூறுகின்றது (1 கொரி. 5:7,8). எனவே, கர்த்தருக்குச் சித்தமானால் வரும் 2013 ம் புதிய ஆண்டில் உங்கள் மனம் புதிதாகட்டும். இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின! (2 கொரி. 5:17) இதுவே தேவன் விரும்பும் பண்டிகை. உங்கள் வஸ்திரம் (பாரம்பரியம், பண்டிகை) அல்ல உங்கள் இருதயம் மாறட்டும் (யோவேல் 2:13) இதுவே தேவன் விரும்பும் பண்டிகை.

(தொடரும்)

**வாழத் தேவையானவைகள் அதிகமாக இருந்தும், வாழ்வதற்கென்று ஒன்றுமில்லாதவர்களுடைய வாழ்க்கை பரிதாபகரமானது.**

# நீங்கள் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்கிறதில்லை? ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்கிறதில்லை?

## S. பிச்சைமுத்து

" கிறிஸ்து இயேசுவிற்குள்ளான என் அன்பான சொந்தங்களுக்கு இயேசுவின் அன்பான நாமத்தில் வாழ்த்துக்கள். சுகமாயிருப்பீர்களாக. நம்முடைய செய்திக்கான வசனப்பகுதி (I கொரி. 6:1-10) வசனங்கள்) இதிலே வச7ஐ மையமாக வைத்து நாம் இந்த செய்தியை தியானிப்போம்.

பரிசுத்தவான்கள் ஏன் அநியாயத்தை சகிக்க வேண்டும்? ஏன் நஷ்டங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும். உலகம், அநீதி, அசுத்தம், கீழ்ப்படியாமை, முறை யற்ற வருமானம், முறையில்லா வாழ்க்கை முறைகள் ஆகியவற்றில் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அநியாயம் நேரிட்டால், நஷ்டம் நேரிட்டால் அது ஏற்புடையது.

நானோ தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறேன். எனக்கு ஏன் இப்படி யெல்லாம் நடக்கிறது? அவமரியாதை, நஷ்டம் இவைகளை எனக்கு ஏன் தேவன் அனுமதிக்கிறார்? என்று நாம் பல நேரங்களில் புலம்புகிறோம், அல்லது நமக்குள்ளேயே இப்படிப்பட்ட கேள்விகளை கேட்டுக்கொள்கிறோம், வேதனைப் படுகிறோம்.

விசேஷமாக எனக்குள் இந்த கேள்விகள் நிறைய முறைகள் எழுந்துள்ளது. தேவனுடைய வேதத்தில் சங்கீதம் 119:92 " உமது வேதம் என் மனமகிழ்ச்சியாய் இராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் " என்று வசனமே ஆறுதல் தந்தது. என்னோடு கூட நீங்களும் இந்த செய்தியினாலே ஆறுதலடை வீர்கள் என நம்புகிறேன். சில பழைய ஏற்பாட்டு உதாரணங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போமா?

### I. அநியாயத்தை சகித்த ஆபிரகாம் (ஆதி. 20:1-18)

ஆபிரகாம் ஒருமுறை பஞ்சத்தின் நிமித்தமாக கேராரிலே சில காலம் தங்க வேண்டியதாக இருந்தது. ஆனால் அங்கிருந்த ஜனங்களோ (வச. 11) ஒரு ஸ்திரீ அழகாக இருந்தால் *அவள் இன்னொருவனுடைய மனைவியாக இருக்கும்போது தங்கள் இச்சையை நடப்பிக்க முடியாது. மாறாக அந்த பெண்ணின் கணவனை கொன்றுவிட்டு அவளை எடுத்துக்கொள்வார்கள்.* என்ன அருமையான மக்கள் பார்த்தீர்களா?

ஆகவே ஆபிரகாம் உயிருக்கு பயந்து போய் தன் மனைவியை சகோதரி என்று சொல்லியிருந்தார். அந்த தேசத்தின் ராஜா அபிமலேக்கு ஆபிரகாமின் மனைவியைக் கொண்டு போய் வைத்துக் கொண்டான் (வச. 6) ராஜா சாராளை தொடுவதற்கு அனுமதிக்கவில்லை என்பது ஆபிரகாமிற்கு தெரியாத விஷயம்.

பிரியமானவர்களே இந்த நிலைமையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். *ஆபிரகாம் உயிர்வாழ உணவு தேடி வந்த இடத்திலே இத்தனையாண்டு காலம் தன்னுடன் வாழ்ந்த தன் துணை இப்பொழுது வேறொருவனுடைய வீட்டில் இருக்கிறாள்.* ஒருநாள், இரண்டு நாளல்ல.

ஆவியானவர் கர்த்தர் அபிமலேக்கின் வீட்டாரின் கர்ப்பங்களை அடைத்து வைத்திருந்தார் என்று சொல்வதைப் பார்த்தால் *ஒரு சில வருடங்களாவது சாராள் அங்கே இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது.*

ஆபிரகாமின் மன உளைச்சலை கொஞ்சம் கற்பனை செய்து பார்ப்போம். அவர் என் மனைவியை ராஜா அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொண்டான் என்று சொல்ல முடியுமா? வாழ்வாதாரங்கள் என்ன ஆவது? வாழ்வாதாரங்களை விட்டுத் தள்ளுங்கள், உயிர் பிழைக்க வாய்ப்பிருக்கிறது. என்னவொரு வெளியே சொல்ல முடியாத வேதனை பாருங்கள். அநியாயத்தை சகித்த ஆபிரகாமிற்கு தேவன் உதவி செய்தார். பிரியமானவர்களே நம்முடைய தேவன் (உபா. 10:18) அந்நியர்களுக்கே அன்னவஸ்திரம் தருகிறவர் என்றால் தாம் அழைத்த ஆபிரகாமிற்கு நேர்ந்த அநியாயத்தையா பார்த்துக் கொண்டிருப்பார்.

தேவன் சொப்பனத்திலே அபிமலேக்கை எச்சரித்தார். சாராளை மீட்டுக் கொடுத்தார். பிரியமானவர்களே, *ஆபிரகாம் இந்த சூழ்நிலையில் தம்மை படைத்த தேவனை நோக்கி மன்றாடி இருப்பார் இல்லையா?* Iபேது 3:12 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவரது செவிகள் நீதிமான் களின் ஜெபத்திற்கு பதிலளிக்க காத்திருக்கின்றன.

நம்முடைய நாட்களிலும் கூட தெய்வ பயமற்ற மனிதர்களிடம் பரிசுத்த வான்கள் ஏமாந்த அனுபவங்களும், வெளியே சொல்லமுடியாத அவமானங் களுக்கும், தேவனிடத்தில் முறையிடுவோம் (லூக். 18:7) அவர் நீடிய பொறுமை யோடிருந்து நமக்கு பதிலளிப்பார். நாம் அநியாயங்களை சகிப்போம். தேவனிடத்தில் பதில் பெறுவோம்.

## II. நஷ்டங்களை பொறுத்துக் கொண்ட ஈசாக்கு (ஆதி. 26:12-30)

ஆபிரகாமின் நாட்களை அல்லாமல் பின்னும் ஒருமுறை பஞ்சம் உண்டானது. அப்பொழுது ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு பெலிஸ்தரின் தேசத்தில் கேராரூருக்கு போனான். தேவன் அந்த தேசத்தில் ஈசாக்கை குடியிருக்க சொன்னார். ஈசாக்கோடு கர்த்தர் இருந்தபடியினாலே விவசாயத்தில் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டார். ஆட்டுமந்தை, மாட்டு மந்தையும் பெருகின. அநேக பணி விடைக்காரர்களும் இருந்தனர்.

பெலிஸ்தியர்கள் ஈசாக்கின் மேல் பொறாமை கொண்டனர். பிரியமானவர் களே! நாம் யாரோடும் எந்த பிரச்சனைக்கும் போகாவிட்டாலும் நம்மீது பொறாமைப் பட்டு வம்புகளை செய்ய ஆட்கள் இருக்கிறார்களல்லவா? ஈசாக்கு தன் விவசாயத்திற் காகவும், மிருக ஜீவன்களுக்காகவும் தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் தோண்டினதும் பெலிஸ்தியர்கள் தூர்த்துப் போட்டதுமான தண்ணீர் துரவுகளை (கிணறுகள்) ஈசாக்கு மீண்டும் தோண்டினார். பிரியமானவர்களே இப்போதும்

பெலிஸ்தியர்கள் மூன்று முறை மூன்று இடங்களில் துரவுகளை தூர்த்துப் போட்டனர். ஈசாக்கின் பொறுமையை யோசியுங்கள்.

ஈசாக்கிற்கு எவ்வளவு பெருத்த நஷ்டம் என்று பார்த்தீர்களா? தேவனுடைய மனிதனாகிய ஈசாக்கு நஷ்டங்களை சகித்தார். *அந்த மக்களோடு வழக்காடினதாகவோ நஷ்ட ஈடு கேட்டதாகவோ, நாம் பார்க்க முடியாது.*

நாற்பதாண்டு காலம் மன்னாவையும், கன்மலையின் தண்ணீரையும் குடித்து சகல நன்மைகளையும் அனுபவித்து கடைசியில் யோசுவா காலேப் என்ற இருவர் மட்டுமே கானானுக்கு தகுதி பெற்றனரே தேவன் எவ்வளவு பெரிய நஷ்டத்தை சகித்திருக்கிறார் பார்த்தீர்களா? *நம்முடைய தகப்பனே நஷ்டங்களை சகிக்கிறவர்தானே, நாமும் சகிப்போம்.*

நீதி. 16:7 ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாய் இருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடு சமாதானமாவார்கள். ஈசாக்கின் வாழ்வில் அது தானே நடந்தது. *பிரியமானவர்களே, நாம் விட்டுக் கொடுத்தால் கெட்டுப் போக மாட்டோம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.* ஆகவே நமக்கு ஏற்படும் நஷ்டங்களை சகிப்போம்.

## III. அவமானங்களையும், விபரீதங்களையும் சகித்த இயேசு கிறிஸ்து (எபி. 12:1-3)

நமதாண்டவர் பாவம் செய்யாதவர் (II கொரி. 5:21, I பேது. 2:21-22) தாம் இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே மிகுதியான நன்மைகளைச் செய்தவர்.

ஆனால் இயேசுவிற்கு நேரிட்ட விபரீதங்கள் அவமானங்கள் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவைகள்.

பலபேர் கூடியிருக்கும் போது ஆடைகளை உரிந்து, முகத்திலே துப்பி, அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டு (ஏசா. 53:9-10) எத்தனை எத்தனை அவமானங்கள் பார்த்தீர்களா? ஆனால், இயேசு இந்த தண்டனைகளுக்கு ஏதுவாக எதையும் செய்யவில்லை என்பது நமக்கு தெரிந்த விஷயம்.

தேவன் கிறிஸ்துவுக்கு எப்படிப்பட்ட அதிகாரத்தை கொடுத்தார் என்பதை (பிலி. 2:5-10) வசனங்களில் பார்க்கிறோம் (யாக். 5:11) பொறுமையாய் இருக்கிறவர்களை பாக்கியவான்கள் என்கிறோம்.

நமதாண்டவருக்கு இத்தனை அவமானங்களையும் தாங்க பெலன் எப்படி கிடைத்ததாம்? இயேசு எல்லா சூழலிலும் தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தை (பிதாவோடு இருக்கும் பரலோக பாக்கியத்தை) நினைத்துப் பார்த்தார். அந்த பாக்கியத்திற்கு முன்னால் இந்த பூமியில் நமக்கு ஏற்படும் ஏமாற்றங்களும், நஷ்டங்களும், அவமானங்களும் ஒன்றுமில்லை (ரோமர் 8:18).

பிரியமானவர்களே! நாம் அநியாயங்களை சகிப்போம். நஷ்டங்களை பொறுத்துக்கொள்வோம். தேவன் பதில் சொல்வார். ஆமென்.

# BIBLE MEDITATION

## TV PROGRAM


TAMILAN TV - Saturday 7.15 am.

TAMILAN TV - Sunday 10.00 pm.

TAMILAN TV - Monday 7.00 am.


## நாளும், நடப்பும்


1. அந்நிய நேரடி முதலீட்டுக்கு பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒப்புதல்
2. காவிரி நதிநீர் விவகாரம் சம்மந்தப்பட்ட இரு மாநிலங்களுக்கும் சவாலான பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.
3. வேளாண்துறைக்கான முக்கியத்துவத்தை குறைப்பது நியாயமற்றது - குடியரசுத் தலைவர்
4. குஜராத் மாநில தேர்தல் இரு தேசிய கட்சிகளுக்கும் கௌரவப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது.
5. பிலிப்பைன்சில் "போபா" புயல் பாதிப்பால் 1000 பேருக்கு மேலாக உயிரியிழந்துள்ளனர்.
6. கிரிக்கெட்டில் இந்திய அணி வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்துள்ளது.





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | Service | SPEAKER |
|---|---|---|---|---|
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Srilanka all Asia Service: SW 25 & 41 M | P.R. Swamy<br>Cell : 09844070763 |
| TAMIL | Saturday | 5.30 PM | Srilanka all Asia Service: SW 25 & 41 M | B. Arjunan<br>Cell : 9443558041 |




Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**


என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.














# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam.